பத்திரக்கிரயம்

[illegible]
தமிழ் நாடு 6.00 இங்கிலாந்து [illegible] 9.00
இலங்கை இந்தியா 8.00 [illegible] 12.00
[illegible] 9.00 [illegible] 13.30
தனிப்பிரதி சதம் 5
முற்பணமனுப்பினாலன்றிக்
கவனிக்கப்படமாட்டா

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1939.

உ
சிவமயம்

இந்துசாதனம்

சேமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை இணையடி நீழலே.

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
[illegible] ரூபா 10.00 [illegible]
[illegible] ரூபா 4.00 [illegible]
அடுத்த முறைகட்கு மேற்படி
விகிதங்களிற் பாதி
[illegible]

விரோதி வருஷம் (1889 ஆவணி மாதம்
28-ந் திகதி ஆரம்பமானது

[புத்தகம் — ௫௧]

யாழ்ப்பாணம்:— பிரமாதி ௵ மாசி ௴ ௧௪ (1940 பெப்ரவரி 26 திங்கட்கிழமை)

[இலக்கம் ௮௩]

“குருலிங்கசங்கமம்”

[இது சென்ற மார்கழி மாசம் (1940 ஜனவரி 4-ம், 5-ம்,6-ம் தேதிகளில்) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்திற் கூடிய அகில இலங்கைச் சைவமகாநாட்டில், நிகழ்ந்த திரு. சி. செல்லையாபிள்ளை அவர்கள் செய்த பிரசாரணமாகும்.]

(முற்றொடர்)

இனி, அதுவதுவாய்ச் செறிந்து நின்ற அறிவும் ஆன்மாக்கள் மலபந்த தாரதம்மியத்திற் கேற்ப ஒருமல முடைய விஞ்ஞானகலரும், இருமலமுடைய பிரளயாகலரும், மும்மலமுடைய சகலரும் என முத்திறத்தர். அவருள்ளும் விஞ்ஞானகலருக்குப் பிணிப்பாய மலசத்தி முற்றுமாசகலின் உண்ணின் றுணர்த்திய ருளுவர். பிரளயாகலருக்குப் பிணிப்பாய மலசத்தி தலைமாதலின்

“மைக்கணும் மான்மழுவும்
வாதமுட னடமுற
மெய்க்காமு கார்புயமும்
விளங்குபணிக் கொடுபுணர்
செக்கருற மதிச்சடையுஞ்
சேயிழையோர் பாகமுமாய்”

முன்னின் றுணர்த்தியருளுவர்,

சகலர்க்குப் பிணிப்பாய மலசத்தி தலைதாமாதலின் ஆன்மசைதன்னியத்தையே திருமேனியாகக் கொண்டு குருவாய் எழுந்தருளி உபதேசமுகத்தானும் அநுபவமுகத்தானும் பலவேறு வகைப்பட உணர்த்தி யருளுவர். அங்ஙனமாகாத வழி, சீடத்த நிழற்போல் அருவாகிநிற்கும் பிராணனை யுய்த்தறிய வல்லுநர்? இதனை,

“இன்னா முன்பாதுக்
கண்ணிருமேக்கின்புரசு
கல்லா மனவாய் வீர்கிழத்தால்
—இக்கா
அருவாகி நின்றானை
யாரறிவார் தானே
உருவாகித்தோன்றானேலுற்று.”

என மெய்கண்டதேவர் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்கானுந் தெளிக. முன்பாறும் கண்ணிரும் அன்பை விளக்குமென்பது.

“காந்த திருமுகங்கே
தப்பசிவ ஞானஞ்
காத்தண்டர் பின்னையெனச்
சொல்லச்—சுராந்த
தனமுடையான் தென்பாண்டி
மாதேவி தாழ்ந்த
மனமுடையா னிருந்த வாறு”

எனத் திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார் அருளிச்செய்த திருவாக்கால் இனிதறியப்படும். அற்றேல் அங்ஙனமாக ஆன்மசைதன்னியத்தையே திருமேனியாகக் கொண்டு சிவமே குருவாய் எழுந்தருளுவதால் அச்சைதன்னியமாவாகிய சிவஞானி சிவமே. அவர் திருவடி சேர்தலே நன்முத்தி. அவர் திருவுருவைத் தரிசித்தலும், திருவார்த்தையைக் கேட்டலும், திருநாமத்தைச் செப்பலும், திருவுருவைத் தியானித்தலும் தெளிந்த சிவஞானப்பேறும். இதனை,

“சிவனேசிவஞானியாதலாற்சுத்த
சிவனேயெனவடிசேரவல்லார்க்கு
நவமானதத்துவ நன்முத்திநண்ணும்
பவமானதின்றிப்பரலோகமாமே.”

எனவும்,

“தெளிவுகுருவின் திருமேனி
காண்டல்
தெளிவுகுருவின் திருவார்த்தை
கேட்டல்
தெளிவுகுருவின் திருநாமஞ்செப்பல்
தெளிவுகுருவுருச்சிந்தித்தறாலே.”

திருமூலநாயனார் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்கானுமுணர்க.

உலகமுய்யுமாறு திருத்தொண்டத்தொகையைத் திருவாய் மலர்ந்தருளிய எஞ்சமய குரவருளொருவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளையே வழிபட்டு அட்ட சித்தியும் முத்தியும் பெற்ற பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணமும் பிறவும் இதற்குச் சான்றாம். சிவமாந்தன்மையராகிய குரவரும் சமயாசாரியர் என இருதிறத்தர். திருநாவுக்கரசு சுவாமிகள், திருஞானசம்பந்தசுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசகசுவாமிகள் ஆகிய நால்வருஞ் சரியை கிரியை யோகம் ஞானம் எனப்படும் நாற்பாதங்களையும் நிறுவுவான் திருவவதாரஞ் செய்த சமயகுரவர்களாகிய பரமசைதன்னியர்கள். மெய்கண்டதேசிக சுவாமிகளும் அவர் சந்தானத்தவர்களும் ஞானோபதேசம் முதலிய தீக்ஷைகள் செய்து ஆன்மாக்களுக்கு வீட்டை உதவுவான் திருவவதாரஞ் செய்தருளிய பரமாசாரியர்கள். இனித் தீக்ஷா குருவும் சிவோகம் பாவனை செய்து தம்மைச் சிவமாகப்பாவித்தே நயனதீக்ஷை முதலிய தீக்கை செய்ய வேண்டுமென ஆகமங்கள் கூறுகின்றன.

இங்ஙனம் தம்முதல் குருவுமாய் உபதேசித்த சிவஞானபோதத்தை உணர்ந்து, சிவஞான சித்தி யயதி, அதனோடே சிவப்பிரகாச முற்றத் திருவருட் பயனைப்பெற்ற சிவன் முத்தராயினர். நிட்டை நிலையில் நின்றவழி அவர் உடம்பு முகந்து கொண்ட பிராரத்தம், திருநாவுக்கரசு சுவாமிகள் சிறறையை விடப் பெற்றாரென ஆண்டு முதல்வன் திருவடிகளில் நானெனவொன்றில்லை தென்று தானெனவே ஏகமாய் நிட்டையில் நின்ற காரணத்தால் அச்சிறறையின் கணணதாய பிராரத்த அநுபவம்,

“மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்
மூசுவண்டறை பொய்கையும்
போன்றதே”

பரமபோக மயமாறு போலப் பரமோகமயமாய், அச்சிவன் முத்தராது அறிவு இச்சை செயல்கள் புறம்பே வியாபரிக்குமிடத்து உடலூழாயுங் கீழ்த்தனின் அக்கீழ்ச்சிக் கண்ணதாய் மலவாசனை தாக்க வண்ணம் அவர் சாதற்குரிய இடங்கள் லிங்க சங்கமங்கள் என்ப தொருதலை. என்னை!

“செய்யலர் நோன்குளச்
சேர லொட்டா
அம்மலங் கழீஇ
அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர்
வேடமும்
ஆலயந் தானும் அரனெனத்
தொழுமே”

என்பது ஓத்தாகலின்.

இலிங்கம்

அறிவித்த லன்றி அறியாத் தன்மையராகிய உயிர்கள் ஞானசாரியரிடத்து ஞானோபதேசத்தைப் பெற்றுத் தெளிந்த ஞானமுடையராய்ச் சிவன்முத்தராய வழியும் சார்ந்ததன் வண்ணமாம் இயல்பினராதலால் அறிவற்றம் பார்த்து விபரீத உணர்வைப் பயக்கும் சுட்டறிவுக்கு விடயமாய நாம ரூபங்களிற் செலுத்தும் ஆணவம் கன்மம் மாயை எனப்படும் மும்மலங்களையும் அறவே ஒழித்து லிங்க சங்கமங்களைச் சார்தல் ஒருதலையான் வேண்டப்படும். என்னை!

“புண்ணிய பாவம் பொருந்துமிக்
காலமியமும்
மண்முதல் மாயைகாண் மாயையுங்
—கண்ணிய
அஞ்ஞானங் காட்டுமிவ் வாணவமு
மிம்மூன்று
மெய்ஞ்ஞானிக் காகா விடு.”

என்பவாகலானும், சிவபெருமான் புறத்தே சிவலிங்கம் முதலிய திருமேனியும், சங்கமமும் ஆகிய இரண்டனிடத்திலுங் குருவை ஒப்ப இடமாகக் கொண்டு நின்று ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்று அருள் செய்வர் ஆகலானு மென்ப. லிங்கம் என்னும் பதத்துக்கு லிங்—லயம், கம—தோற்றம் எனக் கொண்டு உலகும் அசிர்பிரமேந்திராதி உயிர்களும் ஒடுங்குதற்கும் தோற்றுதற்கும் இடமாயுள்ளது எனப் பொருள் கூறுவர். சிவலிங்கம் பீடலிங்க வடிவாயுள்ளது. லிங்கம் நாதமயம். பீடம் விந்து மயம். லிங்கம் ஞானசத்தி வடிவம், பீடம் கிரியாசத்தி வடிவம் எனினுமாம்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

“காங்கிரஸ்காரர்கள் விரைவிற் சிறைசெல்லக் கூடும்”

கல்கத்தாவில் காந்திஜி

போஸ் சகோதரருக்குக் கடிதம்

“இன்னும் அதிகமாகக் கொடு”

கல்கத்தா, பிப் 19

இன்று பகல் 2-25 மணிக்குக் காந்திஜி சாந்திநிகேதனத்திலிருந்து கல்கத்தாவுக்குத் திரும்பினார். அவரை வரவேற்க ஸ்டேஷனில் பெருங்கூட்டம் கூடியிருந்தது. வண்டியும் 25 நிமிஷ நேரம் தாமதித்து வந்தது. ஜனக்கூட்டம் அதிகமாகவிருந்ததால் மகாத்மா வண்டியைவிட்டிறங்க 15 நிமிடங்களாயின. மகாத்மா மோட்டாரில் ஏறினார். அங்கும் அவரைக்காண ஏராளமான ஜனங்கள் கூடியதால் வண்டி நகரவே முடியவில்லை. ஒரு போலிஸ் இன்ஸ்பெக்டர் மோட்டாரின் முன்பாகத்திலுள்ள பானட் மீது ஏறிநின்று ஜனக்கூட்டத்தை விலக்கி மகாத்மாவின் வண்டி போவதற்கு வழி செய்தார். நேராக மகாத்மா பிர்லா பார்க்குக்குச் சென்றார். பிறகு அவர் ஆஸ்பத்திரியிலுள்ள மிஸ்டர் ஆண்டிரூஸைப் போய்ப் பார்த்தார்.

மகாத்மாவின் இரத்தத்தை இன்று டாக்டர்கள் பரிசோதித்துப் பார்த்தார்கள்.

மாலிகண்டாவுக்குப் புறப்பாடு

இன்று இரவு டாக்காமெயிலில் மகாத்மா மாலிகண்டாவுக்குப் புறப்பட்டார். மகாத்மாவைக் காண ஏராளமான பேர் சியால்டா ஸ்டேஷனுக்குச் சென்றிருந்தனர். கூட்டமிருந்தபடியால் காந்திஜி ஒருவருக்கும் தெரியாமல் தனிவழியாக பிளாட்பாரத்துக்குள் நுழைந்தார். சத்தமிடாமல் அவர் மூன்றாம்வகுப்பு வண்டியில் ஏறி உட்கார்ந்தார். சர்தார் படேல் வெகு நேரத்துக்கு முன்னதாகவே ஸ்டேஷனுக்கு வந்துவிட்டார். காந்திஜியை வரவேற்றுப் பலர் ஆரவாரஞ் செய்தனர். அதற்கு எதிரிடையாகச் சிலர் கூச்சலிட்டனர். அதனால் சிறு சச்சரவு நடந்தது. இருவர் காயமடைந்தனர். ஸ்டேஷனிலிருந்து ஜனங்கள் திரும்பியபோது மகாத்மாவுக்கு எதிராக ஆரவாரம் செய்த கோஷ்டியினர் சிலர் அவர்களுடன் சச்சரவிட்டதால், மற்றும் இருவர் காயமடைந்தனர். மொத்தமாக இன்றைய சச்சரவால் ஒரு டஜன் பேர் காயமடைந்ததாகச் செய்தி எட்டுகிறது. அவர்களில் நால்வர் ஆஸ்பத்திரியில் இருக்கின்றனர்.

பிர்லாபார்க்கில் பிரார்த்தனை

இன்று மாலை மகாத்மா புறப்படு முன் பிர்லா பார்க்கில் பிரார்த்தனை நடத்தினார். சுமார் 300 பேர் அங்கு கூடியிருந்தனர். முன்னம் வார்தா ஆஸ்ரமத்திலிருந்த ஜப்பானிய புத்தபாதிரி ஒருவரும் பிரார்த்தனைக்கு வந்திருந்தார். அங்கு ஒரு குழந்தை மகாத்மாவுக்குப் பத்து ரூபாய் நோட்டுக்கள் பலவற்றைக் கொடுத்தது. மகாத்மா சிரித்துக் கொண்டே “இன்னும் அதிகமாகக் கொடு” என்று கேட்டார். அந்தக் குழந்தை மிக்க சிரத்தையுடன் சட்டையை யெல்லாம் தடவிப் பார்த்து “அப்பா இன்னும் அதிகமாக என்னிடம் கொடுக்கவில்லை” என்று சொல்லிற்று.

ஆஸ்பத்திரியில் மகாத்மா

மகாத்மா மிஸ்டர் ஆண்டிரூஸைக் காண ஆஸ்பத்திரிக்குச் சென்றதும் அங்கிருந்தவர்கள் ஜயகோஷம் செய்தனர். அதற்கு முன் அவர் டாக்டர் ராயுடன் மேஜர் டிசமண்ட்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

ராம்கார் காங்கிரசுக்குப் பின் நடப்பதென்ன?

தலைவர் மௌலானா ஆஸாத் விடுத்திருக்கும் செய்தி

முஸ்லிம்களுக்கு வேண்டுகோள்

நாட்டுக்குச் செய்தி

லாகூர், பிப் 18

காங்கிரஸ் தலைவராகத் தம்மைத் தெரிந்தெடுப்பதுபற்றி மௌலானா அபுல்கலாம் ஆஸாத் பின்வருமாறு ஒரு செய்தி விடுத்திருக்கிறார்:

நாளுக்குநாள் நாம் போராட்டத்தினத்தை நெருங்கி வருகிறோம். இதைத்தான் நாம் இப்போது அவசியமாகக் கவனிக்கவேண்டும்.

மௌலானாவுடன் பேட்டி

லாகூர், பிப் 18

மௌலானா அபுல்கலாம் ஆஸாதைப் பத்திரிகை நிருபர்கள் கண்டு பேசியபோது அவர் கூறியதாவது:-

இப்போதுள்ள நிச்சயமற்ற நிலைமை இனியும் நீடிக்கக்கூடாது. ராம்கார் காங்கிரஸுக்குப்பின் காங்கிரஸ் முன்னேற்ற முறையை அநுஷ்டிக்க வேண்டும். புதிய முறையிற் போராட்டம் நடக்க வேண்டும். என்னைத் தலைவராகத் தெரிந்தெடுத்திருக்கும் மகாத்மாவிடம் உங்களுக்குள்ள நம்பிக்கை வெளியாகிறது. அவரது வேலைத் திட்டத்தைப் பலரும் அங்கீகரிப்பதாகவும் தெரிகிறது. இனி, கவனிக்கவேண்டிய விஷயம் ராஜீய விஷயமானாலும் ஹிந்து முஸ்லீம் பிரச்னை விஷயத்தைப் புறக்கணிக்கக்கூடாது. சுயேச்சை பெற நடத்தவேண்டிய போராட்டம் உள்நாட்டுப் பிரச்னைகள் தீருவதற்காகக் காத்திருக்கக்கூடாது. வகுப்புப் பிரச்னைக்கும் ராஜீயப் பிரச்னைக்கும் சம்பந்தமில்லை. வகுப்புப் பிரச்னை நமது உள்நாட்டுப் பிரச்னையாகும். காங்கிரஸ் திட்டமாக ஒரு முறையை வகுத்துவிட்டது. அது இனிப் பொறுக்காது. இப்போதுள்ள நிச்சயமற்ற நிலைமை அதிக நாள் நீடிக்காது.

வகுப்புச் சமரஸ விஷயத்தில் காங்கிரஸ் எப்போதும் ஒப்பந்தத்துக்குத் தயாராகவிருக்கிறது. ஆனால், அதற்கான சுமுகமான ஒரு நிலைமை ஏற்படவேண்டும். தக்கவர்கள் இவ்விஷயத்தில் சமரஸம் செய்ய முன்வரவேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ராஜீய சம்பந்தமாகத் தக்க ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டால், மாகாணங்களிற் கூட்டு மந்திரிசபை அமைக்கும் விஷயத்தைப் பற்றியும் யோசிக்கப்படும்.

மீண்டும் சட்டமறுப்பா?

போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்றால் மீண்டும் சட்டமறுப்பு ஆரம்பிக்க உத்தேசமா? என்று கேட்டதற்கு அவர் “ஆமாம் அப்படித்தான் வந்து முடியும்” என்று பதில் கூறினார்.

சென்ற இரண்டு வருஷங்களாகக் காங்கிரஸ் தலைமைப்பதவியை ஏற்றுக்கொள்ளும்படி என் நண்பர்கள் வற்புறுத்திவருகிறார்கள். சட்டசபை வேலையிற் காங்கிரஸ் முழுக்கிருந்தாலும் நாட்டில் நிம்மதியான நிலைமை இருந்ததாலும் நான் அவர்களின் பிரியப்படி நடக்கவில்லை. இப்போதும் அக்கவுரவத்தை ஏற்க நான் போதிய ஆற்றல் பெற்றிருக்கவில்லையானாலும் இப்போது நிலைமை மாறிவிட்டது. ஐரோப்பிய யுத்தத்தால் காங்கிரஸ் மாகாண நிருவாகப் பொறுப்பை உதறித் தள்ளிவிட்டுத் திட்டமானவொரு போராட்டத்தில் இறங்க ஏற்பாடு செய்கிறது.

இந்த நிலைமை ஏற்பட நான் விசேஷ முயற்சி செய்தேன். இநி

(தொடர்ச்சி 3ம்பக்கம்)

காந்திஜி-கவிந்திரர் சந்திப்பு

‘சாந்திக்காகவே வந்தேன்’ என்றார் காந்திஜி

மௌனமே சிறந்த பிரசங்கம்

சாந்தி நிகேதனம் பிப் 17—

மகாத்மா இன்று காலை போல்பூர் என்றவிடம் வந்து சேர்ந்ததும் அங்கு சாந்தி நிகேதனத்தைச் சேர்ந்த டாக்டர் தாகூரின் புதல்வர் முதலியோர் அவரை வரவேற்றனர். நகரெங்கும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கடைகள் பலவும் கொடிகளால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. வங்க மாகாணக் காங்கிரஸ் கமிட்டியைச் சேர்ந்த சிலர் காரியக் கமிட்டி நியமித்த அட்ஹாக் கமிட்டியை ஆக்ஷேபித்து அங்கு செய்து கொண்டிருந்தனர். அவர்கள் துண்டுப் பிரசுரங்களையும் விளம்பரங்களையும் விநியோகித்துக் கொண்டிருந்தனர்.

உத்தராயண வாயலில் மாணவர்கள் மகாத்மாவை வரவேற்றுக் கவிசிரேஷ்டருக்கு மிக்க இஷ்டமான இடமாகிய “ஷியாமாலி” என்ற மண் குடிசைக்கு அழைத்துச் சென்றனர்.

காந்தி சேவாசங்கத் தலைவர் ஸ்ரீ கிஷோரிலால் மாஷ்ருவாலாவும் காரியதரிசியும் கல்கத்தா ஸ்ரீமான் ஜே. என். தத்தரும் இன்று மாலிகண்டாவுக்குப் புறப்பட்டனர்.

ஸ்ரீகங்காதரராவ் தேஷ்பாண்டே ஸ்ரீமான் கோபபந்துசௌத்ரி முதலியோர் நாளை வருவார்கள்.

சாந்திநிகேதனத்துக்குப் போகும் வழியில் மகாத்மா பர்த்வானைக் கடந்து செல்லுகையில், பர்த்வான் ஸ்டேஷனில் முனிஸிபல் தலைவர் முதலியவர்கள் அவரை வரவேற்றனர். மகாத்மா சிரித்துக்கொண்டே கையை நீட்டி, ஹரிஜனங்களுக்காக ஒவ்வொருவரும் ஒரு பைசா கொடுக்கும்படி கேட்டார். சற்று நேரத்துக்கெல்லாம் மகாத்மாவின் கைகள் நிறைந்துவிட்டன.

தாகூர்-காந்திஜி சந்திப்பு

மகாத்மா கவி சிரேஷ்டரின் குடிசைக்குள் நுழைவதன் முன் பத்திரிகை நிருபர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு ஏதாவது சொல்லும்படி கேட்டதற்கு அவர் சாந்திக்காக நான் இங்கு வந்திருக்கிறேன். என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்றார்.

மாலையில் அவர் பிரார்த்தனை நடத்தினார். காலைப்பகலிலிருந்து அவரது மௌனவிரதம் ஆரம்பமாகும். மாலை 3-30 மணிக்கு மாந்தோப்பு ஒன்றில் மகாத்மாவுக்கு வரவேற்பு நடந்தது. ஆஸ்ரம வாசிகளும் அக்கம்பக்கத்துக் கிராமங்களிலிருந்து வந்த பலரும் அங்கு கூடியிருந்தனர். கவி சிரேஷ்டர் மகாத்மாவை வரவேற்றுப் பேசுகையில், மனித வர்க்கத்தினர் பலருக்கும் மகாத்மா சொந்தமானவர் என்ற முறையில் அவரை அன்புடன் வரவேற்பதாகவும், பல்வித நெருக்கடிகள் மிகுந்துள்ள இக்காலத்தில் இச்சந்திப்பு அந்த நெருக்கடிகளால் அலைக்கப்படாமலிருக்க வேண்டுமென்றும் கூறினார்.

மகாத்மா ஹிந்தியில் இதற்குப் பதிலளிக்கையில் நானும் கவிசிரேஷ்டரும் இங்கு சந்திக்க வேண்டுமென மிஸ்டர் ஆண்டிரூஸ் பல நாளாக விரும்பியிருந்தார். அவர் இன்று நோயினால் வருந்தி வருகிறார். அவர் விரைவில் குணமடையப் பிரார்த்திக்க வேண்டும். குருதேவர் என் விஷயத்தில் கொண்டுள்ள அன்பு எவ்வளவென எனக்குத் தெரியும். ஏதோ யாத்திரைக்குச் செல்வது போல நான் இங்கு வந்தாலும்

தொடர்ச்சி 3ம் பக்கம்

‘கவிப்புலமும் செவிப்புலமும்’

(S. S. K. எழுதுவது)

குயில் தன்னினிய குரலாற் பாடும்போது யார்தானதைக் கேட்பதற்கு விரும்பமாட்டார்கள்? சிறு குழந்தைகூட அக்குயிலுடன் மாறு கவி யின்புறுவதைக் காண்கின்றோம். இனி இசையோடு கூடிய ஓசை எவருடைய மனத்தையுங் கவரவல்லது; உடலை வடாக்கவல்லது; உயிரையுந் தொடவல்லதே. இன்பம் நிறைந்த பாட்டெல்லா மிசையின் குழந்தைகளே. பாட்டென்பது அதற்குரிய ஓசையுடனும் பாவவுணர்ச்சியுடனும் ஒருவாற் பாடப்பெறும் போது, கேட்போருடைய உள்ளத்திலும் அத்தகைய உணர்ச்சிகளையுங் கருத்துக்களையுந் தரவல்லதாகவேண்டும். அகில வுலகின் கணுளவாய பல்வேறு வகைத்தாம பாஷைகளிடையே யுள்ள பலவேறு புலவர்களிடத்தெல்லா மொற்றுமையானதும், உளத்தி யியல்பாக வெழுத்ததுமான பாஷையொன்றுண்டு. அப்பாஷையே இப்பாவவுணர்ச்சியோடு கூடிய ஓசையென்பது. இவ்வோசை நன்றாக அமைந்த வமைந்தவிடத்தில், பொருளமைதிபுலப்படக் கிடப்பினுங் கிடவாதொழியினும், அப்பாட்டு எமது பிசைத் தொடவல்லதாகும். “இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று” என்று கூறப்பட்டது மிக் காரணத்தாலேயாகும்.

இனி இவ்வாறு ஓசை நிரம்பிய பாட்டொன்றை எடுத்தாராய்வாம். சிதம்பரத்திலே திருநடராஜர் வீதி வருகின்ற காட்சியழகைச் சேக்கிழார் சுவாமிகள் வருணிக்கின்றார். செவ்வனே யலங்கரிக்கப்பெற்ற நடராசர் மாலையும் பூவும் பொலியப்பவனிவருகின்றார். முன்னராகவே அரம்பையை ஒத்த தேவமகளிர் தம் நர்த்தனம். சுவாமியின் மருங்கே பின்னராக, மறையோர்கள் சேர்ந்தொலிக்கின்ற வேதகானம், நர்த்தனத்தின்கண் மிக்கு விளங்குவது மிருதங்கவோசை; இதனோடு கூடவியைந்து கேட்பது யாழோசை, தாளவோசை முதலிய இன்னிசைக் கருவிகளி னோசை; அன்றி இருக்குயசுர்சாமம் எனும் வேதங்களோடு தமிழ் மறையாகிய தேவாரத்தோசையுமாம். இவ்வாறுகக் கூறப்பட்ட பல்லியங்களினோசையும் பாடல்களினோசையும் ஒன்றுசேர்ந்து பரந்துபட்டவெளியெல்லாம் ஒலிக்கின்றன. இவற்றோடுகூடச் சுவாமியின்மேல் அணியப் பெற்றிருக்கும் மலர்மேலும் மாலையிடத்தும் நறிய தேனையுண்ணும் வண்டுகள் ரீங்காரஞ்செய்கின்றன. இன்னும், உள்ள வுணர்ச்சி பொங்கித் ததும்புகின்ற அன்பர் குழாம் ஆர்ப்பரித்த ஹரா! ஹரா! சிவ! சிவ! என்றேத்தி வழிபடுமோசை யொருபால்; பிறைசூடிய சடையிலே தரித்த கங்கையின் முழக்கம் மற்றோர்பால்; என இவ்வாறெல்லாம் ஒலிமயமாகவுள்ளது எம்பெருமான் வலஞ்செய்து வரப்பெறுகின்ற திருவீதியெனச் சேக்கிழார் கூறுகின்றார். இனி யவர் கூறுஞ் சொற்களைப் பார்ப்போம்.

“அங்கண்மாமறைமுழங்கு மருங்கே
யாடரம்பையர் அரங்குமுழங்கும்
மங்குல்வானின் இசையைச்சு
முழங்கும் வாசமாலைகளின் வண்டு
[முழங்கும்
பொங்குமன்பருவிகண்பொழி
தொண்டர் மேற்றிசைக்குமொலி
[யெங்குமுழங்கும்
திங்கட்குச்சடை கங்கை முழங்கும்
தேவ தேவர் புரியுந் திருவீதி-”

இப்பாட்டினையிதற்குரிய ஓசையுடன் பாடும்போது முன்னர்க் கூறப்பட்ட பல்லியங்களும பாடலும் பொன்றுசேர்ந் தொலிப்பது போறற் காணலாம். நாலடிகளிலும் மலிந்து விளங்குகின்ற மெல்லொற்றுக்கள் இவ்வோசையை யெழுப்புதற்கு மிகவுந் துணைபுரிகின்றன. இம் மெல்லொற்றுக்கட்குதவியாக நிற்பன சில குறிலோசைகள். உதாரணமாக, முதலாவதடியின் ஐந்து நகரவொற்றுக்களும் ஒரு ணகரவொற்றும் இரு மகரவொற்றுக்களுங் காணப்படுகின்றன, இவ்வாறே ஏனைய அடிகளையும் நோக்கிப்பார்க்கலாகும். இவ்வொற்றுக்கள் (முக்கியமாக மகர நகரவொற்றுக்கள்) தம்பக்கத்தேயுள்ள வல்லின உயிர்மெய்க் குறில்களோடு சேர்ந்து சுவாமி வீதிவரும்பொழுது நர்த்தனத்திலும் தேவாரத்திலும் மிக்கொலிக்கின்ற முழவோசையை (மிருதங்கவோசைக்) குறிப்பாகக் காட்டி நிற்கின்றன. இடையின மெல்லின உயிர்மெய்களுடனும், உயிருடனும் சேர்ந்து வருகின்ற மெல்லொற்றுக்களெல்லாம் பிற பல்லியங்களையும் பாடலையும் குறித்து நிற்குமாற்றையும் [illegible] துணர்ந்து கொள்ளுமாறுநிற்கின்றன. அழகிய இசையுடனும் இப்பாட்டிற்குரிய சந்தவோசையுடனும் பாடுவார்க்கு இச்சுவை நன்கு புலப்படுவதோடமையாது! அக்காட்சிதானுங் கட்புலனுங் கண்டாலொப்ப வுணரக்கிடக்கின்றது.

இத்தகைய ஓசையின்பந் தந்து நிற்கின்ற பிறிதோர் பாட்டினைக் காண்போம். பாவையார் ஆலகந்தார்மீது உள்ளம் விட்டு நெகிழ்ந்து நெஞ்சழிந்து நிற்கும்போது, தாதியர்கள் இவட்குற்ற நோயென்ற முதலில் நோக்குவார்கள். பின்னர் இவள் வாடி மேனி வெதும்பிப் புழுங்கி நிற்பதைக்கண்ட சேடியர் சாந்தாராய்ச் சந்தனக் குழம்பைப் பனிநீரி லளாவி யிவள் மேனியிற் பூசுகின்றனர். விரக நோயினுல் வருந்தும் இவட்குக் குளிர்மதியும் பனிநீராகிய நறுஞ்சாந்தும் வெந்நீர் போற் சுடுகின்றன. ஆதலால் சாந்து தடவியும் சாமரம் வீசியும் முன்னே நிற்கின்ற ஆயத்தை நோக்கி இவ்வாறு தன்பரவசப்பட்டு கொடியீர்! தவிரீர்! தவிரீர்! என அடுக்குப்பண்மையால் [illegible] தன்பவுணர்ச்சியைக் காட்டி நிற்கின்றார்; இப்பாட்டின்கண் சேடியர் சாந்து தடவுமாறுஞ் சாமரம் வீசுமாறும், பாவையார் அவற்றைத் தன்கைகளாற் றவிர்! ‘தவிர்!’ எனக் கூறித் தடுக்குமாறும், தன் புனலும் பாம்பும் பொருந்திய சடையார்க்கன்பினுருவனாள், அவனே எனக்கருள்செய்து நீக்கித் தவிர்க்கவல்லானென்று தன்னுமாறு பிரந்து தன் தோழிக்குரைக்குமாறும் பிறவும் ஓசையாற் குறிப்பாலுணரக்கிடக்கின்றன. இனிச்சேக்கிழாருடைய அப்பாட்டினை இசையுடன் பாடிப் பார்ப்போமாக.

“சந்தக் கமழ்மென் குழலிறுதளி[illegible]
கலைவாண் மதியங் கனல்வானை
[[illegible]
சந்தின் தழலைப் பனிநீரளைந்து
வுக்கொடியீர் தவிரீர் தவிரீர்
வந்திக் குவளை நிலவும் விரைபா
மலயானிலமுமெரியாய் வருமா
லந்தண் புனலும் அரவும் விரவுஞ்
சடையானருள்பெற் றுடையா ரு
[ளார்”

இது நலிவு தன் தோழிக்கெடுத்துத் தொடுக்கிறதல் இப்பாட்டிற்றலைமகளாகியபாவையாருடைய உள்ளம் வெதும்பி விம்மிப்புற்றுக் குமுறிப்பிரிப்பானது முறிந்து முறிந்து விழுந்தெழுகின்றது போலச் சொல்லிடையே அற்றற்று விழுந்து செல்லும் ஓசையும் அந் நிலைமையைப் புலப்படச் செய்யுமாற்றைக் காண்போமாக.

இவ்வாறே ஓசையாற் பொருளமைதி புலப்படக் கம்பன் வைத்துண்ட இரு சித்திரங்களையுஞ் சற்று நோக்குவோம். இவை சித்திரம் செய்து கொண்டிருந்த கும்பகர்ணனைப் போருக்கனுப்ப வேண்டியிராவணேஸ்வரன் தன் கிங்கரர்களைச் சென்றவனை யெழுப்புமாறு பணித்தக் கிங்கரர் கும்பகர்ணனை யெழுப்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் பிரமாதி ஹு
மாசி௴ கசஉ திங்கட்கிழமை

வின்லண்ட் ஓலமிடுகின்றது

எவரும் காத்திருந்த அதோகதி வின்லண்டிற்கு மிக விரைவில் நேரும்போற் காணப்படுகின்றது. இப்பொழுது சில நாட்களாக வரும் யுத்த தந்திச் சமாசாரங்களைக் கொண்டு வின்லண்ட் இந்தவாரம் முடிவதற்குள் ருஷிய கரடியின் வாயுள் இரையாக அகப்பட்டுவிடுமென்பது பூஷிக்கக் கிடக்கின்றது. 180 000000 குடிசனத்தைக்கொண்ட பராக்கிரமத்தோடு கூடிய ருஷியருடன் 400000 குடிசனங்களைக் கொண்டவின்லண்ட் இவ்வளவு காலமும் நிர்வகித்து நின்றது உலகில் எவருங் காத்திராதது. எல்லாராலும் பாராட்டத் தக்கது. வின்லண்டினர் தங்கள் காட்டிற்காக, தங்கள் பிறப்புரிமைக்காக, உயிரைத் திரணமாக மதித்து இறுதிவரையில் யுத்தஞ் செய்தார்கள்; ஆற்ருமை கண்டு பிரான்ஸ் இங்கிலாந்து அமெரிக்கா முதலிய தத்துவராச்சியங்களைத் தங்களுக்கு இந்த ஆபத்தானவேளையில் உதவிசெய்யும்படி ஓலமிட்டார்கள்; ஓலமிட்டு ஆவதென்ன? அமரிக்கா இந்த யுத்தத்தில் எவ்வாற்ருனும் சம்பந்தப்படப் பயந்து தூரத்தில் நின்று வாயுபசாரம் மாத்திரஞ் செய்கின்றது. இனி எங்கள் பிரிதானியர் பிரான்ஸிய ரெனில், பாவம், அவர்கள்தான் செய்வதென்ன; போலண்டிற்கு உதவிசெய்யப்போன மேலே சொல்லப்பட்ட தத்துவ ராச்சியத்தினராகிய பிருத்தானியரும் பிரான்ஸியரும் போலண்டிற்கு உதவி செய்வதற்காக மேற்கு யுத்தமுனையிலே ஜர்மனியருடன் எதிர்த்துச் சமர் செய்யச் சென்றவர்கள் அந்த ஜர்மனியரை வெல்லவும் இல்லையேல் அவர்களிலிருந்து தம்மைக் கழற்றிக் கொண்டு உரவும் முடியாமற் சங்கடப்படும்நேரத்தில் வின்லண்டினர் அவர்களை உதவி கேட்டால் எங்கள் பிருத்தானியராக, பிரான்ஸியராக செய்யக்கூடிய உதவியென்ன? ஆனலும் ஈற்றிலே பிருத்தானிய பிரான்ஸியர் தங்கள் கஷ்டத்தைப் பாராமல் வின்லண்டினருக்குத் தங்களால் இயன்ற உதவிசெய்யத் துணிந்து அங்ஙனஞ் செய்யலாயினர்: ஆனல் அவர்கள் உற்ற விடத்தில் உதவிசெய்யாது இப்பொழுது செய்யத்தொடங்கிய சிறிய உதவி, பட்டமரத்திற்குத் தண்ணீர் வார்த்த தன்மைபோற் பயன் படாதொழிந்தது.

ருஷியர் ஆரம்பத்திலே வின்லண்டினரை அதிகந் தாக்கவில்லை; காரணம்காலகதியிலாயினும் வின்லண்டினர் தங்களுடன் சமாதானத்திற்கு வருவர் என்ற நோக்கமாம். வின்லண்டினர் ருஷியரின் நோக்கத்தை விபரீதமாக விளங்கிக்கொண்டு தம் வலியும் மாற்ருன் வலியும் பாராதவராய் அவர்களுடன் வேகமாக எதிர்த்துப் பொருதினர்; இருநாடுகளுக்கு மிடையே போர் ஆரம்பித்த காலந் தொடக்கம் சென்ற வாரம் வரையில் வின்லண்டினர் ருஷியரைப் புறங்கண்டு லட்சக்கணக்கானேரைக் கொன்றனர்; ருஷிய ஆகாயவிமானங்களைச் சுட்டுவீழ்த்தினர்; பகைவரைச் சிறைப் பிடித்தனர் என்ற இந்தவிதமான தந்திச் சமாசாரங்களே இங்குக் கிடைக்கலாயின: இனி, பிருத்தானிய பிரான்ஷியரும் வின்லண்டினர் செய்யும் யுத்தத்தைப் பாராட்டி வாக்களவில் அவர்களுக்கு ஊக்கங் கொடுத்தனர். ஆனல் இது வின்லண்டு விஷயத்தில் மாத்திரம் நடந்ததல்ல; முந்திப் போலண்டிற்கும் ஜர்மனியருக்கும் யுத்தம் நடந்தபோதும் 18 நாள் வரையில் போலண்டினரே ஜர்மனியரை வென்று வருகின்றனரென்றுதான் தந்திச் சமாசாரங்கள் வாயிலாக அறிந்து வந்தோம்; 19-ம் நாளிற்ருன் போலண்டின் வீட்சியைச் சடுதியிற் கேள்வியுற்ருே மல்லவா. இப்பொழுது ருஷியர் வின்லண்டினுள் அதிகம் பிரவேசித்துவிட்டார்களெனவும், மன்னீர்ஹெம் அரணிற் கூடியபாகத்தை ருஷியர் சிதைத்துவிட்டனரெனவும் பெருந்தொகையான ருஷிய சைனியம் நாள்தோறும் வின்லண்டில் வந்து சேருகின்றனவெனவும் தந்திச் சமாசாரங்களைக் கொண்டு அறியலானேம். ருஷிய ஆகாயப்படை 643 முறை வின்லண்டின்மீது வெடிகுண்டுகளைப் பெய்தனவெனவும் அங்ஙனம் பெய்யப்பட்ட குண்டுகள் 20000வரையிலிருக்குமெனவும் வின்லண்டினரே கணக்கிட்டு வெளிப்படுத்தியுள்ளனர்; இந்த இருபதினாயிரம் குண்டுகளும் ருஷிய ஆகாயப்படையினுல் யுத்தத்திற் சம்பந்தப்பட்டவர்கள் சம்பந்தப்படாதவர்கள் எல்லார்மீதும் எல்லா இல்லங்கள் கட்டடங்கள் மீதும் பெண்கள் விருத்தர் பாலர் நோயாளர் என்ற பேதமின்றிப் பெய்யப்பட்டனவாம்; சிறந்த பட்டணங்களெல்லாம் மயானங்கள்போற் காணப்படுகின்றனவாம். இவ்வளவு காலமாக நடந்த யுத்தத்திலே வின்லண்டினர் தோல்வி யடைந்ததாகவும் வின்லண்ட் வீரர் யுத்தத்தில்மாண்டதாகவும் சிறைப்பட்டதாகவும் நாங்கள் கேள்விப்படவில்லை. இறுதியிற்கூறலாமென இப்பொழுது இச்சமாசாரங்கள் மறைக்கப்பட்டிருக்கின்றனபோலும்.

முந்தி அபிஸீனிய சக்கரவர்த்தியும் அவர் மனைவியும் தங்களுக்கு உதவிசெய்யவேண்டுமென ஓலமிட்ட தன்மைபோல் இப்பொழுதும் வின்லண்டினர் உதவி வேண்டி மூன்று பிரிவாக ஓலமிடுகின்ருர்கள்; "இந்த ஆபத்தான நேரத்தில் எங்களுக்கு உதவி கிடைக்கா விட்டால் நாங்கள் ஒருங்குமாண்டுபோவது நிசம்' என்று பாரிஸ் நகரிலிருக்கும் வின்லண்ட் மந்திரி ஒருபுறமாக ஓலமிடுகின்ருர். "இந்த அந்தரமான நேரத்தில் எங்களுக்குக் குண்டுமருந்து முதலிய உபகரணங்களும், ஆகாயப் படையும் போர்வீரரும் ஆவசியகம் வேண்டும்; ஆனதால் உதவி செய்யுங்கள்" என்று லண்டன் மாநகரிலுள்ள வின்லண்ட்பிரதிநிதியொருவர் இன்னெரு புறமாக முறையிடுகின்ருர். இனி அங்குள்ள குருமார் இங்கிலாந்திலுள்ள பிரதம குருவானவருக்கு "எங்களுக்கு இந்தச் சமயத்தில் உதவிசெய்யவேண்டும்; பிந்தி உதவிவந்தாலும் அதனற்பிரயோசனமில்லை" என்று விண்ணப்பஞ் செய்கின்ருர்கள்; ஆனல் இப்பொழுது வின்லண்டில் நிலையைப் பார்க்குமிடத்து இப்படியான உதவி கிடைத்தாலும் வின்லண்டினர் ருஷியரைப் புறங்காண முடியுமோ என்பது சந்தேகம்.

பிருத்தானிய பிரதம மந்திரியாகிய மிஸ்டர் சாம்பர்லேன், சிலநாட்களின் முன் லண்டனிற் பேசிய ஒரு பேச்சில் "செக்கோஸ்லோவேக்கியா, போலண்ட், வின்லண்ட், என்னுமிவைகளுக்கு நேர்ந்த கதியினை சிறிய ராச்சியங்களுக்கும் நேரவொட்டாது பாதுகாக்கும்படியே பிரித்தானியர்களாகிய நாங்கள் பெரிதும் யுத்தஞ் செய்கிருேம்." என்ற கருத்துப்படப் பேசியுள்ளார்; ஆனதால் வின்லண்டிற்கு விரைவில் நேரவிருக்கும் கதியைப் பிருத்தானியமந்திரி முந்தியே சொல்லிவிட்டார். இப்பொழுது வின்லண்ட்யுத்தம் முடிந்தாலும் உலக சமாதானம் வரும் வரை எல்லா வகையான கஷ்டங்களும் நீங்கி நாங்கள் ஒருவாறு பழையபடி வாழலாமென்று நினைக்க இடமில்லையோ! ஏன்? ஜர்மனியருக்கும் பிருத்தானிய பிரான்ஸியருக்கு மிடையே மேற்கு யுத்தமுனையில் நடக்குஞ் சமருக்கு இப்போதைக்கு ஒரு முடிவுவரும் போக்கு காணப்படவில்லையே. அந்தயுத்தத்தில் இரண்டு பகுதியாரும் சண்டையை இயன்றவரையில் நீண்டகாலத்திற்கு இழுக்கலாமென்று யோசித்துக் கருமமாற்றுகிருர்கள்; இப்படி இழுபட்டு யுத்தம் நடப்பதற்கிடையில் உலகத்தினர், உலகத்திலும் பிருத்தானிய பிரசைகளாகிய நாங்கள் இப்படியே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்க முடியுமா? சிறிய ராச்சியங்களைப் பாதுகாக்க முற்பட்டிருக்கும் பிருத்தானியர், சிறிய ராச்சியமாய் தங்கள் பரிபாலனத்தில் கீழ்ப்பட்டதாய், அடிமைத்திறத்தோடுகூடியதாயிருக்கும் எங்கள் நாட்டையும் பஞ்சம் பசி தொழிலின்மை வியாபாரத் தடை முதலியவற்றிலிருந்து பாதுகாத்தருள வேண்டுமல்லவா!

*

உள்நாட்டுமந்திரியும் பொலிஸ் தலைவரும்

இலங்கை உண்ணுட்டு மந்திரியாராகிய ஸேர். பரன் ஜயதிலகைக்கு தமக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகத்தருட் பொலிஸ் தலைவராகிய மிஸ்ரர் P. N. பாங்ஸ்போன்ற ஒரு வசதியீனமான அதிகாரி வேறெருவரில்லையென்று சொல்லலாம். முந்தி, ரிறேஸ்கேடில் என்னும் அயிரோப்பிய மனுஷன் விஷயமாக ஸேர் பரனுக்கும் பாங்ஸிற்கு மிடையே நேர்ந்த பிணக்கையும், அதனுல் வந்த பயனையும் நாங்கள் இன்னமும் மறந்து போகவில்லை. அது போக இப்பொழுதும் இருபகுதியாருக்குமிடையில் ஒரு பிணக்கு ஏற்பட்டுக் கொண்டது. மந்தியமாகாணத்திலுள்ள மூலோயா என்னும் ஒரு பெரிய தோட்டத்திலே வேலை செய்த கூலிக்காரர்கள் தங்களுக்கும் மேற்படி தோட்ட அதிகாரிகளுக்குமிடையே நேர்ந்த பிணக்குக் காரணமாக வேலை நிறுத்திக் கலகஞ் செய்தார்களென்றும் அந்தக் கலகத்தை அடக்கப் போனவிடத்தில் கோவிந்தன் என்னும் ஒரு இந்திய கூலிக்காரனைப் பொலிசார் சுட்டுக் கொன்று விட்டார்களென்றும் அதனுல் கூலிக்காரர்களுக்கும் அவர்களை அப்படிக் கலகஞ் செய்யும்படி தூண்டிவிட்டார்களெனச் சொல்லப்படும் ஒரு கூட்டத்தினர்க்கும் விரோதமாகப் பொலிஸார் வழக்குத் தொடரலாயினரென்றும் முந்தியே தெரிவிக்கப்பட்டது. இப்படி வியாச்சியங்கள் விசாரணையிலிருக்க உண்ணுட்டு மந்திரியாகிய ஸேர் பரன் ஜயதிலகை தமது நிர்வாக சபையோடும் தேசாதிபதியோடும் யோசித்தபின், ஊர்ச்சனங்களின் வேண்டுகோட்கும் இசைந்து ஒரு விசாரணைச் சங்கத்தை மேற்படி கலக விஷயமாகவும் பொலிஸார் கோவிந்தனைச் சுட்டுக் கொன்றது முறையான செயலோ என்பதை விசாரணை செய்தற்காகவும் தேசாதிபதியின் சம்மதத்துடன் ஏற்படுத்தினர்.

இதில் இன்னுமோரு ஆட்சேபம் பிறந்தது; அதாவது நீதிஸ்தலத்திலே தொடரப்பட்ட வழக்குக்களும் விசாரணைச்சங்கத்தாரின் விசாரணையும் ஏககாலத்தில் நடப்பதோ இல்லையேல் சங்கத்தாரின் விசாரணை நடந்த பின்னர்தான் நீதிஸ்தலத்திலே தொடரப்பட்ட வழக்குக்களின் விசாரணை நடப்பதோ என்பதே ஆசங்கை, உண்ணுட்டு மந்திரியாகிய ஸேர். பரன் ஜயதிலகை, விசாரணைச் சங்கத்தாரின் விசாரணை நடந்தபின்னரே, நீதிஸ்தலத்திலுள்ள வழக்குகள் விளங்கப்படவேண்டுமென்றும் அதனல் பொலிஸார் இப்பொழுது வழக்கை நடத்தாது தவணையிட வேண்டுமென்றும் பொலிஸ்பகுதித் தலைவராகிய மிஸ்ரர் பாங்ஸ் என்பவருக்குத் தெரிவித்தார். ஆனல் மிஸ்ரர் பாங்ஸ் உண்ணுட்டு மந்திரியின் கட்டளையைப் பொருட்படுத்தாது அவருக்கு "மதிப்பினமாக" மறுமொழியெழுதினதுமாத்திரமல்லாமல் தமக்குக் கீழுள்ள கண்டிப் பொலிஸ் தலைவருக்கு மேற்படி வழக்குக்களின் "கோட்டு" விசாரணையை மிக்க ஊக்கமாக நடத்த வேண்டுமென்றும் கட்டளையிட்டு விட்டார்; இதனையறிந்த ஸேர் பரன் இலங்கைத் தேசாதிபதியவர்கட்கு, பொலிஸ் தலைவர் தம்முடைய கட்டளையை ஏற்றுக்கொள்ளவில்லை யென்பதையும் மதிப்பினமாகத் தமக்கு விடையெழுதினரென்பதையும் முறையிட்டார். எங்கள் தேசாதிபதியவர்கள் விஷயத்தைப் பார்த்து விட்டு, பொலிஸ்தலைவர் உண்ணுட்டு மந்திரிக்கு எழுதிய கடிதம் மரியாதையான முறையில் எழுதப்படவில்லை யென்பதைத் தாமும் ஒத்துக்கொள்வதாகவும், ஆனல் பொலிஸ் தலைவர் உண்ணுட்டு மந்திரிக்குக் கீழ்ப்படியாமையாகிய குற்றம் இந்நிகழ்ச்சியில் வரவில்லையென்றும் "மாவிலும் படாமல் மாங்காயிலும் படாமல்" விடைபகர்ந்திருக்கிருர்.

இதனைக்கண்ட உண்ணுட்டு மந்திரி, பொலிஸ் தலைவர் தேசாதிபதி இருவரும் தம்மை அவமதித்தனரென்ற கொள்கையுடையாராய் இவ்விஷயத்தை இலங்கை அரசாங்கசபையில் எடுத்தாளும்படி கேட்டுள்ளார்; இலங்கை அரசாங்க சபையார் விஷயங்கள் முழுவதையும் நன்ருகப்படித்தபின் வருகிற மார்ச்௴ 5உ தொடக்கமாக இவ்விஷயம் அரசாங்கசபைக் கூட்டத்தில் எடுத்தாளப்படுமெனத் தவணையிட்டிருக்கின்றனர். பொலிஸ்பகுதியும் தேசாதிபதியும் செய்த செய்கையால் அரசாங்கசபையின் சுதந்திரம் அதிகாரமெல்லாம் நீங்கிவிடுமென்றும் பழையபடி பிருத்தானிய சுயேச்சாதிகாரபத்தியமே வந்துசேருமென்றும் அரசாங்கசபையார் ஆத்திரப்படுகின்றனர்.

கிராம வித்தியா விருத்திச் சங்கம்

இற்றைக்கு இரண்டு வாரங்கட்கு முன் (11-2-40) காரைநகர்ச் சைவமகாசபை மண்டபத்தில் ஒரு சபை கூட்டப்பட்டது. அச்சபையின் நோக்கம் தீவுப்பகுதிகளில் தனிப் பரிபாலனத்திலுள்ள சைவ வித்தியாசாலைகளை, அந்த அந்த வித்தியாசாலைகளின் அதிபர்களையும் இன்னுஞ் சில வித்தியாபிமானிகளையும் சேர்த்துக் கிராம வித்தியா விருத்திச் சங்கமெனப் பெயரிட்டு அச்சங்கத்தின் பொறுப்பிலே மேலே காட்டப்பட்ட வித்தியாசாலைகளின் பரிபாலனத்தை ஒப்புவிக்கவேண்டுமென்பதே. தனி அதிபர் [illegible] வர்களாற் பரிபாலிக்கப்படும் வித்தியாசாலைகளிற் சிற்சில சமயங்களிற் பிழைகள் நேர்ந்துவிடுகின்றனவென்பதே மேற்படி கூட்டத்திலன்று எடுத்துப் பேசப்பட்ட பிரதான நியாயமாகும். குறித்த கூட்டத்திற் றலைமை வகித்த ஸ்ரீ S. கலமதம்பியவர்களும், மாவிட்டபுரம் இந்துக்கல்லூரித் தலைமையாசிரியராகிய ஸ்ரீ V. வீரசிங்கமவர்களும் பள்ளிக்கூடங்கள் ஒரு சங்கத்தின்கீழ் இருப்பதால் வரக்கூடிய நன்மைகளை விரிவாக எடுத்துக் காட்டினுர்கள். ஸ்ரீ வீரசிங்கமவர்கள் காட்டிய நியாயங்களுட் பிரதானமானதொன்று, இப்படித்தனித்தனி அதிபர்களின் பரிபாலனத்தில் இருக்குமானல் இன்னும் 10 வருடகாலத்திலே ஆசிரியர் இப்படியான பள்ளிக்கூடங்களின் பரிபாலனத்தைத் தங்கள்பொறுப்பில் வைத்துக்கொள்ளக்கூடுமென்பதும், அங்ஙனமானல் பிள்ளைகளுக்கு அப்பள்ளிக்கூடங்களிற் சமயமுறை கல்வியை ஊட்டுதல் முடியாதாகுமென்பதுமேயாகும். இது ஒரு தக்க நியாயந்தான். தனிப் பரிபாலனத்திலுள்ள வித்தியாசாலைகள் விருத்தியடைந்துவருதல் கஷ்டமென்பதை நாம் அனுபவத்திற் கண்டிருக்கின்றேம். ஆனதால் ஒரு வித்தியா சங்கத்தின் பரிபாலனத்தில் இப்படியான பாடசாலைகளை ஒப்புவித்தல் நல்லது; வித்தியா சங்கமும் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் முறையில் அதாவது கிராம வித்தியா விருத்திச்சங்கமாயின் அவ்வாயிலாக அரசாங்கத்தினரும் அவ்வக் கிராமத்தினரும் அபிமானம் பூண்டு ஒத்துழைத்தலும் முடியும். ஆயினும் தம் தமது கருத்தவராகிய தன்மை தனித்தனி அதிபர்களுக்கிடையே இருத்தல்போல, இப்படிப்பட்டவர்களால் ஆக்கப்படுஞ் சங்கத்தினரிடத்தும் இத் தம்பங் கருத்தன்மை இடையிடையே புகுந்துவிடுகின்றது; இங்ஙனம் புகவே, சங்கத்தினர்க்கிடையே அபிப்பிராயபேதமும் பிணக்குக்களும் விளைகின்றன; இதனற் சங்கங்கள் சபைகளால் நடத்தப்படுந் தருமஸ்தாபனங்கள்தாமும் சிற்சிலசமயங்களில் விருத்தி குன்றி இடையூறு படுதல் சகசம். ஆனதால் இப்படியான தருமங்களைப் பரிபாலிப்பவர்கள் சங்கத்தினராகட்டும், சபையினராகட்டும், தனித்தனியாகட்டும் எல்லாரும் "அழுக்கா றவா வெகுளி இன்னச்சொல் நான்கும் — இழுக்கா வியன்ற தறம்" என்ற வள்ளுவர் வாக்கை உளத்திற் கொண்டு கருமம் ஆற்றப் புகுவரேல் எவ்வகையான இடையூறும் [illegible].

ராம்கார்காங்கிரஸ் உபசரணை நிர்வாகசபை

ராஞ்சி, பிப் 17

பாபுராசேஜேந்திர பிரசாத் ராம்கார்காங்கிரஸின் உபசரணை நிர்வாகசபைத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிருர்.

யாழ்ப்பாணப் பட்டினசபை

ஆயுள் நீட்டிப்புப்பற்றிக் கசெத்தில் பிரசுரம்

1942ம் ஆண்டு ஜனவரி௴ 1ம் திகதியிலிருந்து யாழ்ப்பாணப்பட்டினத்தில் நகரசபை ஸ்தாபிப்பதாகச் சுயதல நிர்வாகசபையார் தீர்மானித்திருப்பதால், தற்பொழுதுள்ள பட்டினசபை அங்கத்தவர்களின் பதவியை 1941ம் ஆண்டு டிசம்பர்மாசம் 31ம் திகதிவரை நீட்டிப்பதற்கான நகர்ச்சட்டமொன்று சென்ற வெள்ளிக்கிழமை வெளியான கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

காரைநகர்மணிவாசக வாசிகசாலை

காரைநகர் "மாப்பாணவூர்" என்னுங்குறிச்சியிலுள்ள சைவப்பெரியார் பலரின் வேண்டுகோட்கிணங்கச் 'சடையாளி' வைரவகோவிலுக்கு அருகிலுள்ள மணிவாசக மடத்தில் காரைமணிவாசக சபையினரால் சிலதினங்களுக்குமுன்னர் ஒரு வாசிகசாலை ஆரம்பிக்கப்பெற்றுச் செவ்வனே நடைபெற்று வருகின்றதெனவும், ஆங்கு பல தமிழ்ப்பத்திரிகைகளும் ஆங்கிலப் பத்திரிகைகளும் வந்து சேருகின்றனவென்றும் யாவராயினும் எக்காலத்திலும் வந்து பத்திரிகைகளை இலவசமாக வாசிக்கலாமென்றும் மேற்படி சபையினர் அறிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் விவசாயப் பண்ணை

அவசியம் வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், பெப் 18

உணவுப்பொருள் உற்பத்தி டைரெக்டர் திரு. டப்ளியூ. இ. ஹாட்டேகும் யாழ்ப்பாணச் சங்கத்தைச் சேர்ந்த ஒரு தூதுக்கோஷ்டிக்குமிடையில் நடந்த கூட்டத்தில் சங்கத்தலைவர் திரு. என். கனகசபை கூட்டுக்காரியதரிசிகள் திருவாளர்கள் வி. அருணம்பலம், என். செல்வத்துரை, திரு. வி. எல். கார்த்திகேசு ஆகியோர் அங்கத்தவர்களாக இருந்தார்கள்.

திரு. கனகசபை பேசியதாவது:- கிளிநொச்சித் திட்டத்தின்கீழ் ஓர் அரசாங்கப் பண்ணையை ஏற்படுத்தவேண்டியது அவசியம். வேலையற்றிருக்கும் வேலைகொடுப்பதற்கும் உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் முற்போக்கான விவசாயமுறையை விவசாயிகளுக்கு விளம்பரஞ் செய்யக்கூடிய ஒரு ஸ்தாபனமாக இருப்பதுமே குறித்த அரசாங்கப்பண்ணையின் பிரதான நோக்கங்களாக இருக்கவேண்டும். கல்விகற்று வேலையில்லா திருப்பவர்களுக்கும் விவசாயிகளுக்கும் கிளிநொச்சித் திட்டத்தின்கீழ்க் காணிகள் வழங்கப்படவேண்டும். கல்வியறிவுள்ளவர்களுக்குத் தனித்தனி 25 ஏக்கர்க் காணி ஒதுக்கப்படவேண்டும். அரசாங்கச் செலவிலேயே முதலில் இப் பிரதேசம் விவசாயத்திற்கு ஏற்றமுறையிற் பண்படுத்தப்பட்டு முதல்வருஷ அரிவிவெட்டும் செய்யவேண்டும்.

திரு. என். செல்வத்துரை பேசும்போது, மழையில்லாத காலங்களில் யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கு [illegible] அணைத்தும் திருப்பித் திறக்கப்படவேண்டுமென்று குறிப்பிட்டார்.

பாடசாலைப் பண்ணைகள்

கிளிநொச்சித் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணத்திலிருந்து குடியேறிய குடும்பங்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு அந்த போதியவசதி அளிக்கப்படவில்லையாதலால், அந்த் திட்டம் பலனற்றதாகிவிட்டதென்று திரு. வி. என். கார்த்திகேசு குறிப்பிட்டுவிட்டு மேலும் பேசியதாவது:-

"கல்விகற்றவர்களுக்குக் காணிக் குடியேற்ற விஷயத்திற் பிரீதியை உண்டுபண்ணுவதற்குத் தீவிர முயற்சி செய்ய வேண்டியது அவசியம். இத்துறையில் நான் ஒருயோசனைகூற விரும்புகிறேன். அதாவது, இலங்கையிலுள்ள ஒவ்வொரு பாடசாலைக்கும் விவசாயம் செய்வதற்குக் குறைந்த பக்ஷம் 5 ஏக்கர் காணியாவது வசதியானதாக இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட பாடசாலைக்குக் கல்விக்காக அரசாங்கம் உதவி நன்கொடை வழங்குவதற்கு முன்பாகக் குறித்த காணி அப்பாடசாலையினுற் பயிரிடப்பட்டிருக்கிறதா திருப்திப்பட வேண்டுமென்பது ஒரு நிபந்தனையாக இருக்கவேண்டும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்ப்பாசன வசதியை அபிவிருத்திசெய்வதை முன்னிட்டு கூடிய விரைவில் யாழ்ப்பாணப் பிரதேசம் முழுவதும் அளவை செய்யப்படவேண்டும்.

டிரக்டர் நோரும் உத்தரவாதம்

உணவுப் பொருள் உற்பத்தியைத் தீவிரமாக்குவதற்கு அரசாங்கப் பண்ணைகளை ஏற்படுத்தும் யோசனையைத் தாம் ஆதரிப்பதாகவும், ஆயின் இத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மிகக் கூடுதலான பணம் செலவாகக் கூடுமாதலால், அப்படிப்பட்ட பண்ணைகளில் வேலை செய்வதற்கு முன்வரக்கூடியவர்கள் போதிய அளவு இருக்கின்றனரென்பதற்கு உத்தரவாதம் வேண்டுமென்றும் உணவுப்பொருள் உற்பத்தி டிரக்டர் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறைக் கொலைத்தன வழக்கு

சுப்பிறீங்கோட்டில் விசாரணை

23—2—40

ஊர்காவற்றுறையில் வசிக்கும் மருதன்-சன்னதயாசென்பவன் அல்லூர் முருகன்-சின்னன் என்னும் 62 வயதுடைய வயோதிகனுக்குப் பொல்லாலடித்துப் படுகாயம் வருவித்ததி னிமித்தமாகக் கொலைசெய்ய எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு யாழ்ப்பாணச் சுப்பிறீம் கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

டாக்குத்தர் திரு. S. W. இரத்தினேசர் காயக்காரனுக்கு முதுகுப் பக்கத்தில் ஒருகாயமிருந்ததென்றும் அது மிகவும் பாரதூரமான காயமென்றும் காயக்காரன் ஒரு கிழமைவரையில் ஆபத்தான நிலையிலிருந்தானென்றும் அவன் வைத்தியத்தின் பொருட்டு ஆஸ்பத்திரியில் ஒருமாதமும் நாலுநாட்களுமிருந்தானென்றும் கூறினர். பின்னர்க்காயக்காரனுகிய முருகன் - சின்னன் சாக்ஷியம் கூறியவற்றின் சாராம்சமாவது:—

"எனக்கு எதிரியைத் தெரியும். அவன் என்னுடைய உறவினன். எதிரி வேலணையில் விவாகம் செய்தவன். அவன் சின்னப்பனுடைய ஒழுங்கையிற் குடியிருக்கிறுன். எனக்கு மூன்று பிள்ளைகளுண்டு. இரண்டு பெண்களும் ஒரு ஆணும். இரண்டு பெண்களும் விவாகம் செய்துவிட்டார்கள். ஒரு பெண்ணை நாகமுத்தன் விவாகஞ் செய்தான். மற்றவளைக் கந்தையன் விவாகஞ் செய்தான். நாகமுத்தனும் மகளும் நான் இருக்கும் வளவுக்குள் வேறொரு வீட்டில் இருக்கிருர்கள். இச் சம்பவத்தன்று சந்திரகிரகணமிருந்தது. இரவு 8மணிவரையில் நான் மலசலம் கழிக்கச்சென்று வீட்டிற்குத் திரும்பிவருகையில் எனது வீட்டுப் படலையடியில் V. குழந்தை, V. பொன்னன், V. செல்லை, V. மரியான், M. கந்தையன் ஆகியோர் நின்று "வெளிக்கிடடா" வென்று கூப்பிட்டனர். நான் அவர்களுக்குக் கிட்டச் சென்றதும் "என்னடா அப்பா" என்று கேட்டேன். அப்போது V. குழந்தையன் "உனது மகளையும் மருமகனையும் வெளியிலவிடு" என்று சொன்ஞன்.

அப்போது எதிரி ஒரு பொல்லால எனக்கு அடித்தான். அடிக்கும்போது "இவனுக்கு அடித்தால அவர்கள் வெளியில வருவார்கள்" என்று சொல்லி அடித்தான். எனக்கு அவன் அடித்ததும் நான் நிலத்தில் விழப்போகும் சமயத்தில் பிலிப்பு-சந்தியாகு அல்லது கிறிஸ்தோ வந்து என்னைப் பிடித்தான். என்னுடைய பேரன் வில்லியம் எனக்கு அடித்தபோது வேலியடியில் நின்று பார்த்துக்கொண்டு நின்ருன். இதற்கிடையில் எதிரிகள் ஓடிவிட்டனர். இச்சம்பவம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. பின்னர் என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றனர். நான் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியிலிருந்து விலக்கப்பட்டபின், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலிருந்து வைத்தியஞ்செய்வித்தேன்.

பின்னர் ஊர்காவற்றுறைப் பொலிஸ்கோட்டில் பங்கா இழுப்பவனும் கோட்டைக்கூட்டிச் சுத்தஞ் செய்பவனுமாகிய பிலிப்பு கிறிஸ்தோ என்பவன் கூறிய சாட்சியத்தின் சாராம்சமாவது.- "எனக்கு எதிரியைத் தெரியும் காயக்காரனையும் நாகமுத்தனையுந் தெரியும். இச்சம்பவத்தன்று இரவு 8மணியளவில் நான் நாகமுத்தன் வீட்டிற்குச் சென்றேன். அப்போது எதிரியும் வேறு இரண்டு மூன்றுபேருமாக அவனுடைய படலையடியில் நின்று வெளிக்கிட்டுவாடா வெளிக்கிட்டுவாடா என்று கூப்பிட்டனர். அப்போது எதிரி அங்குமிங்குமாக உலாவிக்கொண்டு நின்ருன். அங்கு நின்றவர்கள் ஒருவரும் ஆயுதமும் வைத்திருக்கவில்லை. அன்றிரவு சந்திரகிரகணமிருந்தது. எதிரி கூப்பிட்டபோது நாகமுத்தன் வீட்டார் ஒருவரும் வெளியே வரவில்லை. அந்தச் சமயத்தில் காயக்காரக்கிழவன் பக்கத்தே உள்ள ஒழுங்கையால் தன் வீட்டுப்பக்கமாக வந்தான். அவன் இவர்களைக் கண்டதும் ஏதோ கதைத்தான். என்ன கதைத்தான் என்பது எனக்குத் தெரியாது. கிழவன் குழந்தையனேடு கதைத்தபோது எதிரி தனது இடுப்புக்குள்ளிருந்த ஒரு பொல்லை எடுத்துக் கிழவனுக்கு அடித்தான். அடிக்கும்போது 'இவனுக்கு அடித்தால மகளும் மருமகனும் வெளியே வருவார்கள் என்று சொன்ஞன். கிழவன் நிலத்தில் விழுந்தான். நான் அவனைப் பிடித்தேன். வில்லியமும் தம்பிமுத்துவும் அவ்விடத்திற்கு வந்தனர். நான் நடந்தவற்றைத் தம்பிமுத்துவுக்குச் சொன்னேன். பின்னர்ப் பொலிஸ் நிலையஞ் சென்று இச்சம்பவத்தை அறிவித்தபோது அவர்கள் காயக்காரனையும் பொலிஸ்நிலையம் கொண்டுவரச்சொன்ஞர்கள். காயக்காரனை அங்குகொண்டு சென்றேம். பொலிசார் எனது வாய்முறைப்பாட்டைப் பதிவுசெய்தனர். இதன்பின்னர் வல்லியம்பிள்ளை-தம்பிமுத்துவும் சாட்சியங்கூறினர். விசாரணை நடைபெறுகிறது. ஈ—கி

ஆண்டான்குளக் கொலை வழக்கு

தேசாதிபதியின் பதிலை எதிர்பார்த்துத் தீர்ப்புக் கூறல் தவணையிடப்பட்டது

முல்லைத்தீவு டிவிஷனைச்சேர்ந்த குமுழமுனையிலுள்ள ஆண்டான் குளத்தில்வசிக்கும்வினசி-நாகமணி என்பவன் தனது இருபத்திரண்டு வயதுவரையிலுள்ள மகன் நாகமணி - பசுபதி என்பவனைக் கோடரியால் அடித்துக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்குச் சுப்பிறீம் கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விசாரணையின் பின் யூரிமார் ஏகமனதாக எதிரி குற்றச்சாட்டைச் செய்யும்போது ஆளை மாருட்டக் குணத்திற் (விசர்) செய்திருந்தானென அபிப்பிராயங்கூறினர். நீதியாசர் எதிரியை யாழ்ப்பாணம் ஜெயிலில் பாதுகாப்பிற் போகும்படி கூறித் தாம் எதிரிமீது கொண்டுவரப்பட்ட தீர்ப்பைப்பற்றித் தேசாதிபதி அவர்களுக்கு அறிவிப்பதாயும் அவருடைய மறுமொழி வந்ததும் எதிரிக்குத் தீர்ப்புக் கூறலாகவும் கூறி எதிரியை அனுப்பி வைத்தார். ஈ-கி

மந்திரியின் பேச்சுக்கு மறுப்பு

காலி மேயர் தரும் விளக்க விபரம்

காலி, பிப், 16

ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா, சமீபத்தில் காலியில் நடந்த ஒரு கூட்டத்தில் காலி நகரமேயர் திரு. டப்ளியூ. தகநாயகாவைப்பற்றி ஒரு செய்தியை வெளியிட்டார். அஃதாவது, திரு. ஜே. ஈ. பெரேரா என்பவர் ராஜிநாமாச் செய்ததால் காலி நகராசபையில் ஏற்பட்ட காலி ஸ்தானத்திற்குத் திரு. தோமஸ் அமரசூரியாவையோ அல்லது திரு. ஈ. எம். கருணாரத்னவையோ நியமிக்கக் கூடாதென்று, காலி நகரமேயர் ஸ்தல ஸ்தாபன மந்திரியிடம் [illegible] சொன்னதாகக் கூறப்பட்டது. இது சம்பந்தமாகத் திரு. ஈ. எம். கருணாரத்ன, கனம் மந்திரியின் கூற்று உண்மைதானு என்று விசாரித்துக் காலி நகரமேயருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். எனவே, திரு. கருணாரத்னவுக்கு மேயர் பின்வருமாறு மறுமொழி எழுதியிருக்கிருர்.

"தேர்தலில் தோற்றுப்போனவர்களை குறித்த காலி ஸ்தானத்திற்கு நியமிக்கப்படக்கூடாதென்று நான் கனம் மந்திரியிடம் பேசினேன், தேசாதிபதிக்கு எனது மகஜரிலும் தெரிவித்திருக்கிறேன். தனிப்பட்டவர்கள் எவரையும் நான் பெயர் குறிக்கவில்லை. எனது மகஜரில் கீழ்க்காணும் வார்த்தைகளையே குறிப்பிட்டிருந்தேன். "தேர்தலில் தோற்றுப்போன ஒருவர் நியமன அங்கத்தவராக மீண்டும் சபைக்கு வருவாரானல், அவர் எப்பொழுதுமே முணுமுணுத்துக்கொண்டிருப்பவராகக் காணப்படுவாரென்பது பொதுவிதி. அன்றியும் அவர் எதிர்ப்பும் இடைஞ்சலும் உண்டு பண்ணும் மனேபாவத்துடனேயே இருப்பார்."

மேலும், திரு. தகநாயகா கூறுவதாவது:-

"கனம் மந்திரியை நான் பேட்டி கண்ட சமயம் உதவி மேயரும் என்னேடிருந்தார். குறிப்பிட்ட எந்தப் பிரமுகரையும் பற்றி நான் பிரஸ்தாபிக்கவில்லையென்பதை உதவி மேயரும் ஒப்புக்கொண்டிருக்கிருர்."

காங்கிரஸ்காரர்கள் விரைவிற் சிறைசெல்லக்கூடும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இன்ன பொறுப்பையும் நான் கண்குணர்ந்திருக்கிறேன். நான் தீர்க்கமாக ஆலோசித்துப் பார்த்து இத்தச்சமயத்தில் பொறுப்பை ஏற்றுக்கொள்ள மறுக்கக்கூடாது என்று முடிவுசெய்தேன். இப்போது நாட்டில் ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இச்சமயத்தில் எனது சகாக்கள் என் விஷயத்தில் நம்பிக்கை வைத்திருப்பதால் எனது [illegible] தற்போதைய [illegible] பலன் தரக்கூடும் என நம்புகிறேன். என் விஷயத்தில் நம்பிக்கை கொண்ட சகாக்கள் பலருக்கும் வந்தனம். அவர்கள் என்னிடம் நம்பிக்கை வைத்தது போலவே என்னுடன் ஒத்துழைத்து வரவும் வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சட்டமறுப்பை ஆரம்பிப்பதற்குத் தகுதியான நிலைமை ஏற்பட வேண்டியது அவசியந்தான். ஆனால், வகுப்புக் கலவரம் ஏற்படக்கூடுமென்ற அச்சத்துக்கு அதிக காரணமில்லை. ஜின்னுவின் இரண்டு சாதியைப்பற்றி வற்புறுத்துவதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. காங்கிரஸ் காரியநிர்வாகசபை அபேதவாதிகளுக்கும் மற்றக் கட்சியினருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்பதே என் அபிப்பிராயம். ஆனால், அதைப்பற்றி இப்போது நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை.

பதவி ஏற்க நிபந்தனை

1935ம் வருஷ இந்திய அரசாங்கச் சட்டப்படி இனிக் காங்கிரஸ் பதவி ஏறாது. பிரிட்டிஷ் அரசாங்கம் காங்கிரஸ் கோரிக்கைக்கு இணங்கினால் கூட்டு மந்திரிசபை அமைக்கும் விஷயத்தையும் யோசிக்கலாம்.

சீக்கிரத்தில் சிறை செல்வர்

பஞ்சாபில் காங்கிரஸ்காரர்கள் இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி கைதியாவதைப் பற்றித் தலைவரிடம் பிரஸ்தாபித்தபோது அவர் காங்கிரஸ்காரர்கள் சீக்கிரத்தில் சிறை செல்லக்கூடும் என்றார்.

சிந்து காங்கிரஸ் கட்சியைப்பற்றி அவர் விரைவில் ஓர் அறிக்கை வெளியிடுவார்.

பஞ்சாபுக்கு வந்ததேன்

இன்றமாலை மௌலானா அபுல்கலாம் ஆஸாத் பெரியதொரு கூட்டத்திற் பேசினார். காங்கிரஸ் தலைவராக அவர் தெரிந்தெடுக்கப்பட்டபின், முதல் முதலாக இன்றுதான் பேசினார்; இக்கூட்டத்துக்கு முஸ்லிம்கள் ஏராளமாக வந்திருந்தனர். அஹ்ரார்தொண்டர்களும் காங்கிரஸ் தொண்டர்களும் அணிவகுத்து நின்று அவருக்கு வந்தனம் செலுத்தினர். மௌலானா தாம் பஞ்சாபுக்கு வந்தகாரணத்தை இக்கூட்டத்தில் விளக்கினார்.

முஸ்லிம்கள் தங்கள் பாதுகாப்புக்காகப் போராட உரிமை பெற்றிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அதற்காகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர் பார்க்கக்கூடாது. இக்காட்டினர் உதவியை எதிர்பார்த்த அவர்கள் பாதுகாப்புக்காகப் போராடவேண்டும்.

பஞ்சாபில் காங்கிரஸ்காரர்களிடையே அபிப்பிராயபேதம் இருந்துவந்ததால் இங்கு காங்கிரஸ் வேலைகள் நடப்பதற்குக் குந்தகம் ஏற்பட்டுவந்தது. ஆனால் இப்போது எனது வேண்டுகோளுக்கிணங்க இருசாராரும் ஓர் ஒப்பந்தத்துக்கு வந்திருப்பதால், இனி இங்கு காங்கிரஸ்காரியங்கள் சரிவர நடக்கும். வகுப்புப் பிரச்னையைச் சீக்கிரத்தில் தீர்த்துவைக்க வேண்டுமென ஒவ்வொருவரும் கவலைப்படுகிறார்கள். அதற்கான முயற்சி செய்து இந்தியாவின் விடுதலையாகும் சுதந்தரப் போராட்ட விஷயத்தில் முஸ்லிம்கள் காங்கிரஸுடன் ஒத்துழைக்கவேண்டும். முஸ்லிம்கள் இக்காட்டினர் விஷயத்தில் சந்தேகங் கொள்ளக்கூடாது. அவர்களின் உரிமைக்குப் பாதகம் நேராது. சுதந்தரப் போராட்டத்திற் கலந்து கொள்வதைத் தவிர, அவர்களுக்கு வேறு வழியில்லை. காங்கிரஸ் எல்லோருக்கும் பிரதிநிதி சபை. அதில் எல்லோரும் சேரலாம். ஆகவே முஸ்லிம்கள் சந்தேகத்தைவிட்டுக் காங்கிரஸ் கொடிக்கீழ் வந்து சேரவேண்டும்.

நேர்முறையில் வந்து சேரவிரும்புவர்களுக்கு எப்போதும் காங்கிரஸில் இடம் உண்டு. மற்றவர்களுக்கு இல்லை.

டாக்டர் பட்டாபி

டாக்டர் பட்டாபி சீதாராமையா காங்கிரஸ் தலைவராக மௌலானா தெரிந்தெடுக்கப்பட்டதுபற்றி பாராட்டுச் செய்தி அனுப்பியிருக்கிறார். அவரது காலத்தில் சுயராஜ்யப் பிரச்னை தீர்ந்துவிடுமென நம்பியிருப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நள்ளிரவில் நால்வர் கொலை

வாலிபக்காமுகனின் வாக்குமூலம்

கண்டி, பிப்ரவரி

கலகெதரா சாலைக்கோவிலைச்சேர்ந்த [illegible] ஞாயிற்றுக்கிழமை இரவு [illegible] டிஸ்திரிக்கில் ஒரு குடும்பத்தினரைக் கொலைசெய்ததாக R. M. முத்தபண்டா என்பவன் நேற்றுக் கண்டிப் பொலிஸ் நீதிபதி திரு M. C. சன்சோனி முன்னிலையில் தானே அந்த நால்வரையும் கொன்றதாக ஒப்புக்கொண்டான்.

நீதிபதி அவனது வாக்குமூலத்தைப் பதிவுசெய்தார்.

முத்தபண்டா என்பவன் கூறியதாவது:—

எனவயது 18. நான் அப்புவாவீட்டில் 1½ வருஷகாலமாக வேலைக்கிருந்தேன். ஒருவருஷம் மூன்றுமாசமாக நான் அப்புவாவின் மனைவியோடு கூட்டுக் கொண்டிருந்தேன். அப்புவாவுக்கு இது தெரிந்ததும், தன் மனைவியை அடித்து அவளது சேலையையும் கிழித்தார். அவள் பயந்து ஓடிவிட்டாள்.

அடுத்தநாள் அப்புவா கண்டிக்குப் போனபின் அவள் என்னை நோக்கி, "நான் இனி அப்புவாவோடு வசிக்க முடியாது. நீ அப்புவாவைக்கொன்றுவிட்டு உன்கிராமத்துக்குப்போ, நானும் அங்கு வந்து சேருகிறேன்" என்று சொன்னாள்.

வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் நான் அப்புவாவீட்டுக்குப் போனேன். அங்கு அப்புவா [illegible] கிடந்தார். குழந்தைகளும் நித்திரையாய்க் கிடந்தனர். நான் அப்புவாவை அலவாங்கால் அடித்துக் கொன்றேன். அதன்பின் இரண்டு குழந்தைகளையும் கொன்றேன். இறந்தவரின் மருமகளான அங்கோ எனும் சிறுமியும் எழுந்து சத்தமிட்டாள். அவளையும் அலவாங்கால் அடித்தேன். பின் அவளுக்கு என்ன சம்பவித்தது என்று எனக்குத் தெரியாது.

முத்தபண்டா என்பவன் பெப்ரவரி 20ந் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டான்.

காந்திஜி-கவீந்திரர் சந்திப்பு

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

நான் விருந்தாளியாக இங்கு வரவில்லை, வீட்டுக்குத் திரும்பி வந்திருக்கிறேன். பிச்சையெடுப்பதில் எனக்குப் பழக்கம் அதிகம். இங்கும் நான் பிச்சைகேட்கிறேன். குருதேவரின் ஆசீர்வாதப் பிச்சையை நான் கேட்டேன். அவரது ஆசீர்வாதம் கிடைத்தது. என்மனம் திருப்தியுடனிருக்கிறது. 1915ம் வருஷத்திலே எனக்கு இந்த ஆஸ்ரமம்தான் இடம் தந்து உதவியது. நான் இங்கு அதிகநாள் தங்கமுடியாததற்கு வருந்துகிறேன். [illegible] விரோதமாக நான் இங்கு ராஜ்ய பாரம் எதுவுமில்லாமல் வந்திருக்கிறேன் என்றார்.

மாலைப் பிரார்த்தனை

சாந்திநிகேதனம், பிப் 18—

மகாத்மா இன்றுமாலை நடத்திய பிரார்த்தனையில் சாந்திநிகேதனத்திலிருந்து இரண்டு பாடல்கள் பாடப்பட்டன. மகாத்மா இன்றிரவு [illegible]ிகா என்ற நாடகத்தைப் பார்த்தார். நாளைக்காலை அவர் போல்பூரில் ஒரு கூட்டத்தில் பேசிவிட்டு கல்கத்தாவை விட்டுப் புறப்படுவார்.

இன்றிரவு மகாத்மா நிம்மதியாகத் தூங்கினார். காலையில் மாணவர்களுடன் பிரார்த்தனை நடத்தினார். பிறகு சாந்தி நிகேதனத்தைச் சேர்ந்த பல இடங்களையும் பார்த்துப் பழைய நண்பர்களுடன் சந்தோஷமாகப் பேசினார். பல வருஷங்களுக்கு முன் அபனீந்திர தாகூர் எழுதிய தமது படத்தை அவர் பார்த்தபோது மகாத்மா பலமாகச் சிரித்தார். அப்படத்தில் மகாத்மாவுடன் டாக்டர் தாகூரும், மிஸ்டர் ஆண்டிரூஸுமிருந்தனர். ஸ்ரீமான் மகாதேவ தேசாயின் புதல்வர் தேக அசௌக்கியமாயிருப்ப அவர் இன்று கல்கத்தாவைவிட்டுப் புறப்பட்டு விட்டார்.

ஸ்ரீநிகேதனத்தில் மகாத்மா கிராம ஊழியர்கள் பலருடன் பேசினார். அவர்கள் மகாத்மாவைச் சில வார்த்தைகள் கூறும்படி கேட்டதற்கு மகாத்மா மவுனமே சிறந்த பிரசங்கமென்று சிரிப்புடன் சொன்னார். பிறகு அவர் தாம் முன் பார்த்தபோதிருந்ததைவிட இப்போது அதிக அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாகவும் கூறினார். ஆஸ்பத்திரியிலுள்ள மிஸ்டர் ஆண்டிரூஸை இரண்டாம்முறையும் பார்த்து விட்டு மகாத்மா கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டார்.

ஸ்ரீநிகேதனத்திலிருந்து திரும்பியபின் மகாத்மா கவி சிரேஷ்டருடன் பல பிரதான விஷயங்களைப் பற்றி 40 நிமிஷ நேரம் பேசினார்.

ஹரிஜன நிதிக்காக இன்று 1000 ரூபாய் பண முடிப்பு அளிக்கப்பட்டது. காலை போல்பூர் கூட்டத்தில் 500 ரூபாய் பண முடிப்பு அளிக்கப்படும். சாந்திநிகேதன மாணவர்களும் அவருக்கு ஒரு பண முடிப்பு அளித்தார்கள்.

மகாத்மாவின் புறப்பாடு

சாந்தி நிகேதனம், பிப் 19—

மகாத்மா மவுனவிரதம் அனுஷ்டிப்பதால் ஒருவருடனும் பேசவில்லை. அவர் இன்று விடை பெறக் கொண்டு புறப்பட்டபோது கவி சிரேஷ்டர் அவரிடம் ஒரு கவிதையைக் கொடுத்தார். "தாங்கள் இதைப் படிக்க வேண்டும்; பிரியமிருந்தால் பதில் எழுதுங்கள். ஒன்றும் சொல்லாவிட்டால் தங்கள் கருத்து இன்னதென்பதை நான் அறிந்து கொள்வேன்" என்று ஹிந்துஸ்தானியிற் கூறினார். மகாத்மா புத்தகசாலைக்குச் சென்றபோது அங்கிருந்தவர்கள் கூப்பிய கரத்துடன் அவருக்கு வழியனுப்பு உபசாரம் கூறினர். டாக்டர் தாகூரின் பிரதம காரியதர்சிகள் ஸ்டேஷனுக்குச் சென்று மகாத்மாவை வழியனுப்பினர். மகாத்மா வாய்விட்டு ஒன்றும் சொல்லாவிட்டாலும் அவரது முகத்தில் உணர்ச்சி ததும்பி நின்றது.

காந்திஜீ காரியக் கமிட்டிக் கூட்டத்துக்காக பாட்னாவுக்குப் போகையில் அவருக்கு விசேஷ வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கான் அப்துல் கபார்கான் காந்தி சேவா சங்கக் கூட்டத்துக்கு வரமாட்டார். ராஜாஜியின் குமாரர் தேக அசௌக்கியமாகவிருப்பதால் அவரும் மகாநாட்டுக்கு வரமாட்டார் எனத் தெரிகிறது.

லாகூரில் மௌலானா ஆஸாத்

லாகூர், பிப் 17

மௌலானா அபுல்கலாம் ஆஸாத் இன்னுமிரண்டொருநாள் அதிகமாக லாகூரில் தங்குவார். புதியமாகாண நிர்வாகசபை கவனிக்கவேண்டிய வேலைத்திட்டத்தை அவர் விளக்கிச் சொல்வார். பிரபல காங்கிரஸ்காரர்கள் பலரோடு அவர் பேசினார்.

கவிப்புலமும் செவிப்புலமும்

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

புமாறுரைக் கூறுவன். "முன்னெல்லாம் உனக்கு முன்பாகப் போருக்குச்சென்றார் வீரர் யாவரும் மீண்டாரல்லர்; உங்கள் மாயமான இளமைவாழ்க்கையின் மேலுமுடிவுகாலம் பிறக்கவில்லை? அவ்வழிவுக்கு வேண்டிய பாபத்தைத் தாம் முன்னேன் தெரிந்தே இட்டுவைத்திருக்கின்றனர். இன்னும் முன் உறக்கமெதற்காகவோ? போர்க்களத்துக்குச் சென்றால் அங்கே நீண்டகாலம் மீளாத்துயில் கொள்ளலாம், சென்று வா உறங்குவாயாக", எனப் பலவாறு சொல்லி அன்று இலங்கையுடைய இளமைப் பருவத்தில் இவனுக் கசுலாட்டியும் இன்னும் புதுமையும் நிறைய [illegible] அம் அலைத்தலைத் தெழுப்புகின்றனர். இக்கவிகளினோசை யுவமையில் நித்திரைசெய்பொருவனை யெழுப்புவதுபோன்றது. இனிக் கவிகளைப்பாடியறிவோமாக.

"உறங்குகின்ற கும்பகன்ன
 உங்கண்மாய வாழ்வெலாம்
இறங்குகின்ற தின்றுகாணெ
 ழுந்திராய் எழுந்திராய்
கறங்குபோல விற்பிடித்த
 காலதூதர் கையிலே
உறங்குவா யுறங்குவா யினிக்
 கிடந் துறங்குவாய்"— (க)

"என்றுமீதி லாவரக்க ரின்ப
 மாய வாழ்வெலாம்
சென்று தீய தும்முனேன்
 தெரிந்து தீமை தேடினேன்
இன்றிறத்தல் திண்ணமாக
 வினைமுன் னுறக்கமேன்?
அன்றிலைத செங்கையால
 லெத்தலைத் துணர்த்தினர்"-(உ)

இம்முறையே அழகுபடக் கவிதைப் பொருளுக்கேற்றவகையான ஓசையுடன் அமைப்பது எல்லாத் தேசத்திலும், எல்லாப்பாஷைகளிலும் ஆகச்சிறந்து விளங்குகின்ற பெரும் புலவர்களாற் கையாளப்படும் முறையென்பதை முன்னரே யறிந்தோம். ஒரு சிறந்த இலக்கியப் பேராசிரியர் பிரெஞ்சு பாஷையிலோர் சொற்றுமறியாத பன்னிரண்டு வயசுடைய மாணவர்களை மிகுதியுங் கொண்டவோராங்கிலக் கலாசாலை வகுப்பில், "நேறாய்?" என்னும் புலவர் செய்த கவியின் ஒருபகுதியைப் படித்துக் காட்டினார். அவர் பாடுமோசையாமே [illegible] கும்போது அங்கேயிருந்த குழப்பம் அடங்கி வெற்றிமுழக்கம் என்றெல்லாம் மாணவர்கள் சொல்லக்கூடியதாகவிருந்ததாம். 'Awe armes citoyens! Formez vos bataillons' என்ற வடிவோசையன்றேயோ போர்முரசுபோன் றுழுக்கின்றதல்லவா? "Qu'un sang impur abreuve nos sillons! என்பயமிருடைய சிறும் பேரல 'உன்' என்ற தொனியே தமிழிற் பெயர்த்தெழுதவேண்டிய அவசியமின்றி ஒருவருடைய சாபமொழி யென்பதைப் புலப்படுத்தாநிற்கும். இதைப் போன்றே தயங்கித்தயங்கி நிற்பதுபோன் றுழுபட்ட நெடிய உயிர்களுடன் குறைபிரந்து நிற்கும் பாவவுணர்ச்சியோடு கூடிய ஓசைகளையுடைய சொற்களைக் கொண்ட "Miserere Domine" என்னுமடியில் ஓர் வழிபாடு புலப்படக் காணகிடக்கும். இவ்வாறு தமிழ்ப்பாஷை சிறிதுந் தெரியாத ஒருவர்க்கு மணிவாசகப் பெருமானோதிய,

"கடையவ னேனைக் கருணையி
 னாற் கலந்தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதி
 கண்டாய் விறல் வேங்கையின்றோ

அடையவ னேனை மண்ணுமுத்தா
 கோசமங்கைக்கரசே
சடையவனே தளர்ந்தேனெம்
 பிரானென்னைத் தாங்கிக்கொள்
 [ளே"

இவ்வடிகள் பாடியவளவில் நெஞ்சுருகப் பிரார்த்தனை செய்யும்பெருமானைக் கண்டதென்று அச்சொற்களுக்குண்டான ஒலியாற்றலாற் கூறவமைந்து கிடக்கின்றது.

இவற்றைப் போல ஆங்கிலத்திலோர் உதாரணத்தையுமெடுப்போம்.

"Cannon to right of them
Cannon to left of them
Cannon in front of them
Volleyed and thundered."

இவ்வடிகளை யாங்கிலத்தில் ஒரு சொற்றுமறியாத ஒருவருக்கு ஓசையுடன் படித்துக்காட்டினால், அவர் இவ்வடிகள் ஓர் போர் நிகழ்ச்சியைக் குறிப்பதென்பதை யுடனே சொல்லிவிடுவர். இவ்வாறு பொருளுக்கேற்ப ஓசையமையப் பாடுவது ஓர் அணி. அதை ஆங்கிலத்தில் Onomatopoeia! என்பது. இனி முன்னர்த் தந்த ஆங்கில வடிகளைத் தமிழிற் பெயர்த்தெழுதுவாம். அது

"அவரின்
 வலத்தும் பீரங்கியே
 இடத்தும் பீரங்கியே
 முன்னும் பீரங்கியே
 இடித்து முழக்கின"— என

வரும். இவ்வடிகளில் முன்னர் ஆங்கிலத்திற் காணப்படுகின்ற அடிகளின் பொருளும் பெரும்பாலும் அமைந்து கிடக்கின்றது. ஆனால் ஆங்கிலக் கவியிலுள்ள அவ்வடிகள் கேட்போருடைய உள்ளத்தில் தன் ஓசையா லுணர்ச்செய்யும் எழுச்சியையும் பொருளையும் இம் மொழிபெயர்ப்புச் செய்ய முடிகிறதில்லை. ஏன்? இவ்வாறு இம் மொழிபெயர்ப்புஞ் செய்யவல்லதாயின், இதை இவ்வாறு தமிழிற் றந்தோரும் ஒரு புலவருகவன்றோ இருத்தல் வேண்டும்?

தொடரும்.

அறிவித்தல்

வண்ணார்பண்ணைச் சிவன்கோவிற் பங்குனிமாசத் திருவிழாக்காலத்தில் வல்வெட்டிச் சந்தாரத்தனை

[illegible]

1940-ம் ஆண்டு [illegible]

1940-ம் ஆண்டு [illegible]

P. R. கிருஷ்ணரத்தினம்,

17-2-40

G 41 22-2-40.

கவனியுங்கள்
சலவைக்கு சேர்த்தியானது.
நயம் பெத்தாபுரம் ஸில்க் சால்
3½×5 ஸில்க் சால் 1-க்கு ரூபா 1-4-0
டசின் 1-க்கு ரூபா 13—00 மட்டும்
3×8 ஸில்க்வேட்டி 1-க்கு ரூபா 3-00
டசின் ஒன்றுக்கு ரூபா 32-00
மனேஜர், திருஞானலிங்காக்டசி,
கோட்டார் P O, திருவிதாங்கூர்.
(Y. 188—6-11-39—5-11-40.)

கல்கத்தாவில் காந்திஜி

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

வீட்டுக்குச் சென்று மிஸ்டர் ஆண்டிரூஸ் தேகநிலையைப்பற்றி விசாரித்தார். காலைக்காலை டக்டர்கள் கலந்து பேசியபின், மற்றொரு ரணசிகிச்சை செய்யவேண்டிய அவசியம் ஏற்படக்கூடுமெனத் தெரிகிறது. லேடி. நீலரத்ன சர்க்காரும் தேக அசௌக்கியமாக இருப்பதால் காந்திஜி அவரையும் போய்ப் பார்த்தார். மகாத்மாஜியின் தேகநிலை சரியாக இருப்பதாக டாக்டர் ராய் கூறினார்.

நூல் சன்மானம்

ஸேர் நீலரத்ன சர்க்கார் வீட்டிலிருந்து காந்திஜி திரும்பியதும் வங்காள விதவை ஒருத்தி மகாத்மாவிடம் வந்து அவள் நூற்ற நூலும் ஹரிஜன நிதிக்கு ஒரு பத்து ரூபாய் நோட்டும் கொடுத்தாள். அவள் தானே நூற்ற அந்த நூலைக் கொண்டு மகாத்மா ஒரு ஆடை செய்து கட்டிக்கொண்டால் தமது ஜன்மம் சாபல்யமடையுமெனக் கூறினர். மகாத்மாவுக்காகவே தாம் அந்த நூலை நூற்றதாக அவள் சொன்னாள். மகாத்மா புன்சிரிப்புடன் அந்த நூலை ஏற்றுக்கொண்டார்.

போஸ் சகோதரருக்குக் கடிதம்

காந்திஜீ தனித்தனியாகச் சுபாஷ் பாபுவுக்கும், சரத் பாபுவுக்கும் கடிதங்களை அனுப்பி யிருப்பதாகத் தெரிகிறது. அக் கடிதங்களின் விவரம் இன்னதெனத் தெரியவில்லை. கவி சிரேஷ்டர் காந்திஜிக்கு எழுதியிருந்த கடிதத்துக்கு மகாத்மா பதில் எழுதி டக்டர் எ. சக்ரவர்த்தியிடம் கொடுத்து விட்டதாகத் தெரிகிறது.

மகாத்மா வருகை

மாலிகண்டா, பிப் 20

காந்தி சேவாசங்க மகாநாட்டுக்காக இன்று மகாத்மாவும் அவரது பத்னியும் அவரது காரியதரிசிகளும் ஒரு தனிக்கப்பலில் மாலிகண்டா வந்து சேர்ந்தனர். மாலிகண்டா ஆஸ்ரமத்தைச் சேர்ந்த ஸ்திரீகளும் பிறரும் அவர்களை வரவேற்றனர். இன்று காலை 9-30 மணிக்குக் காந்திஜி காதி கிராமக் கைத்தொழில் பொருட்காட்சியைத் திறந்துவைத்தார். மகாநாடு மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும். காந்திஜி இம்மகாநாட்டிலும் [illegible] கூட்டத்தில் பேசுவார். பகல் 2 மணி முதல் 4 மணி வரை மகாநாட்டுப் பந்தலில் நூல் நூற்றுக் காட்டப்படும். நாளை முதல் மகாநாடு காலை 7 மணியிலிருந்து 9 மணிவரை நடக்கும். காந்திஜி பிரதினமும் மாலை 4-30க்கும் இரவு 7 மணிக்கும் பிரார்த்தனை நடத்துவார்.

மனித நூல்

(Anthropology)

திரு. ந. சி. கந்தையாபிள்ளை

(Copy Right)

(முற்றொடர்)

இந்து ஐரோப்பிய பாஷைகளுக்கிடையில் இவ்வகையான சம்பவம் காணப்படுகிறது. இந்துக்கள்மீடியர் பேர்சியர் உரோமர்கிரேக்கர் சேர்மனியர் கல்தியர் சிலாவியர்முதியோர் பாஷைகள்பிரிவது போல் பிரிந்து வழங்குகின்றன. ஆசியாவிலும் ஐரோப்பாவிலுமுள்ள சாதிகளின் முன்னோர் ஒருகூட்டம் காட்டுமிராண்டியினர் என்று நேரிகின்றது. இச்சாதியாரிலிருந்து பிரிந்தவர்களாகிய சாதியினர் வழங்கியமொழிகள் சரித்திரகாலத்தில் உற்பத்தி அறியமுடியாத பலபாஷைகளாயின. இம்மொழிகளை ஆராய்ந்து ஒழுங்கை கண்டுபிடிப்பதற்கு உயர்ந்தமொழிநூல் அறிவுவேண்டும். இதனால் எழுத்துப்பிரமாணங்கள் எவ்வளவு தூரம் செல்கின்றனவென்று அறிந்துகொள்ளலாம். சரித்திரகாலத்துக்கு அப்பாற்பட்டது என்றுநாம் கூறும்காலத்துக்கு அப்பாற்பட்ட சரித்திரத்துக்கு முற்பட்ட பலகாலங்கள் இருந்திருக்கவேண்டும்.

மனிதரின் ஆரம்ப மனஒற்றுமையையும், பொதுவான பேச்சுமுறையையும், உபசாதிகளின் வேறுபட்ட தன்மைகளையும் பாஷையின் சொல்லிலக்கண வேறுபாடுகளையும் அறிதற்கு மொழிஆராய்ச்சி உதவி புரிகின்றது. இப்பொழுது வழங்கும் இனம் இனமானமொழிகளும் அவை பிறந்தற்கேதுவாயுள்ள ஆதிப்பாஷைகளும் சாதிகளையும் உபசாதிகளையும்பிரித்தறிய உதவியாயிருக்கின்றன. ஒருபாஷைக்குரியசொற்கள் மற்றப்பாஷையிற் காணப்படுமாயின் இருசாதியாருக்குமிடையில் உறவு ஏற்பட்டிருந்ததென்று அறியலாம்.

ஆரம்பகாலமொழி:—

மனிதர் வாயினுல் பாஷைபேச அறியாதிருந்தகாலத்தில் சைகைகளால்பேசினர். இதனுல்மனிதசமூகத்துக்கு எண்ணத்தைவெளியிடும் முறை பொதுவாயிருந்தது. செவிடரும் ஊமருமாகிய தூரத்தைகளோடுபேசுவதும் காட்டில் எதிர்ப்படும்வேடரோடுபேசுவதும் சைகைகாட்டும்முறையில் ஒருவகையினவாகும். இம்முறைசாதிபடிப்பு என்னும் தன்மையைப் பொறுத்ததன்று.

ஆ, ஓ, ஏ என்னும் அதிசயத்தைக் குறிக்கும் ஒலிகளும், மியூ மாகா முதலிய பூனை மாடு காக்கைகளின் ஓசைகளைக்கேட்கச் சொல்லும் முறையையும் போன்றன, சைகைகளோடு ஒலிகளையும் சேர்த்துச் சொல்லும் முறையாகும். உணர்ச்சிகளைச் சத்தங்களால் அறிவிக்கும் இயல்பு மிருகங்களிடமும் பறவைகளிடமுமுண்டு இவ்வாறுபாஷைஆரம்பித்து வளர்ச்சி அடைந்திருக்கிறது.

ஒருமொழி பலமொழிகளாக மாறுதல்:—

சமஸ்கிருதம் பாரசீகம் கிரேக்கம் லத்தீன் ஆங்கிலம் முதலிய மொழிகளெல்லாம் ஒருஆரிய உற்பத்தியைச் சேர்ந்தன. ஆரியம் ஒருகாலத்தில் ஒருகூட்டத்தாரால் மாத்திரம் பேசப்பட்டது. ஒருபாஷைதானே உச்சரிப்புசேரல் வேறுபாடுகளுடன் பலபாஷைகளாக மாறுகிறது. பாஷையைப் பேசுபவர் மற்றப்பாஷையை விளங்க முடியாமல் வந்திருக்கிறது. பாஷைகள் அவற்றை வழங்கும்சாதியாரின் மனப்போக்கின்படி மாற்றமடைகின்றன.

பேசும்பாஷையைக்கொண்டு ஒரு சாதியைத் தீர்மானிக்கக்கூடாது. யூதர் எபிரேயு மொழியை மறந்துவிட்டனர்; தாம் குடியேறியிருக்கும் தேசபாஷைகளைப் பேசுகின்றனர். இவ்வாறுபலசம்பவங்கள் காணப்படுகின்றன. தோற்ற வடிவங்களுக்கு அடுத்தபடியாகவே ஒரு சாதியைத்தீர்மானிப்பதற்கு பாஷை உதவுகின்றது.

நாகரிகவளர்ச்சி:—

மனிதர் அநாகரிக காலத்தில் உபயோகித்தபொருள்களையே நாகரிககாலத்தில் திருத்தமான முறையில் பாவிக்கின்றனர். அநாகரிகசாதியார் உபயோகித்த சுமார் கோடரி சட்டி கத்தி ஊசி நூல் வலைபடகுமுதலியவற்றையே ஐரோப்பிய சாதியார் பாவிக்கின்றனர். நாகரிகமென்பது அறிவுவிருத்தியில் தங்கியிருக்கிறது. அநாகரிகமனிதன் உபயோகித்தபொருள்களையே நாகரிகமக்கள்திருத்தமானமுறையிற்செய்து பாவிக்கின்றனர்.

எல்லா அநாகரிகமக்கள் இடையும் ஆவிகளைவணங்கும் கொள்கை காணப்படுகின்றது. இக்கொள்கையிலிருந்தே தத்துவசாத்திர சம்பந்தமானதும் ஆடம்பரமானகிரியைகளோடு கூடியதுமாகிய சமயங்கள் எழுந்தன. அநாகரிகத்திலிருந்து நாகரிகத்தை அடைவதற்கிடையில்பலகாலங்கள் உழவு கைத்தொழில்களென்பன வளர்ச்சியடைந்தன.

மனித வளர்ச்சியைப் பற்றியஊகம்;—

எகிப்து இந்தியா சிறு ஆசியா கிரீஸ் முதலிய பழைய நாகரிக தேசங்களிலும் கல்லாயுதங்கள் கண்டெடுக்கப்பட்டன. இதனுல் அத்தேசங்களில் வாழ்ந்தமக்கள் எல்லோரும் ஒருகாலத்தில் கற்காலநாகரிகத்தில் இருந்தார்களென்பது வெளிப்படை. ஒருகாலத்தில் உயர்ந்த அல்லது தாழ்ந்த நாகரிகமுடையமக்கட்கூட்டங்களின் முன்னேர்கள் திருத்தமுறாதும் கலைகளை அறியாதும் இருந்தார்களென்று விளங்குகின்றது.

(தொடரும்)

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளிப்பகுதித் தமிழ்ப் பாடசாலைகளின் சுகாதாரப் போட்டிப்பரிசு

இப் போட்டியிற் சைவவித்தியாவிருத்திச்சங்கமுகாமையின் கீழுள்ள மட்டுவில் வடக்குகமலாசனிவித்தியாசாலை முதலாம் பரிசில் பெற்றது.

தென்மராட்சி பச்சிலைப்பள்ளிப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் நடைபெற்றசுகாதாரவேலைகளைக்கவனித்து முதலாவதாகவந்த பாடசாலைக்கு யாழ்ப்பாணம் தென்மராட்சிப்பகுதி அரசாங்க சபைப் பிரதிநிதி ஸ்ரீமான் அ. மகாதேவா அவர்களால் அளிக்கப்பட்ட கேடயத்தை (Shield) பரிசிலாகக் கொடுக்கும் சேர்க்கை மட்டுவில் வடக்குக் கமலாசனி வித்தியாசாலையில் 14-2-40 புதன்கிழமை இரவு சாவகச்சேரி சின்னத்தம்பி ஆசிரியகலாசாலைப் பிரதமாசிரியர் ஸ்ரீமான் J. C. அமரசிங்கம் B. A. அவர்களின் தலைமையின்கீழ் ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்தநுணம் உதவி வைத்திய சுகாதாரத் தலைவர் (Asst Director of medical & sanitary services) டக்டர் செல்லப்பா O P E அவர்களும் வடபாகச் சுகாதாரத்தலைவர் (Divisional medical officer of Health) டக்டர் கலாட்துரை அவர்களும் வடபெரும்பாக வித்தியாதரிசி C T [illegible] அவர்களும், யாழ்ப்பாணச் சுகாதாரத் தலைவர் (M O H) டக்டர் துரைராசா அவர்களும் பாடசாலைப்பரிசோதகர் ஸ்ரீ அருட்பிரகாசம் அவர்களும் சுகாதாரவைத்தியர்(Field Medical Officer) டக்டர் த. சபாரத்தினம் அவர்களும் பரிசுபெற்றபாடசாலையின் மனேஜர் துவான் திரு க. இராமலிங்கம் அவர்களும் முகமளித்திருந்தனர். ஸ்ரீமாந் அ. மகாதேவா அவர்கள் தாம் சமுகமளிக்க இயலாதிருந்தமையைப்பற்றி யறிவிக்கப்பட்டது.

அக்கிராமத்தலைவர் அவர்களின் வேண்டுகோட்படி வடபெரும்பாக வித்தியாதரிசி ஸ்ரீமாந் C. T. [illegible] அவர்கள் ஆங்கிலத்தில் பேசியதன்கருத்து:—

யாழ்ப்பாணம் தென்மராட்சி அரசாங்கசபைப் பிரதிநிதி ஸ்ரீமாந் அ. மகாதேவா அவர்கள் இன்று இங்கு வந்திருந்தால் என்னகாரணத்திற்குப்பரிசு சுகாதாரசம்பந்தமாகக் கொடுக்கமுன்வந்தாரென்று தெளிவாகவிளக்கியிருப்பார். ஆனால் அவர்இங்கில்லாதது வருத்தத்துக்கதே. சுகாதாரத்தின்தன்மையை உலகமுழுதும் உணர்ந்துவருகிற இக்காலத்தில் அதைப் பள்ளிக்கூடங்களில் போதிப்பதினால் பிள்ளைகளின் மூலம் பெற்றோரும் இனிவரும் சந்ததியாரையும் பாதுகாக்கமுடியுமென எண்ணியே ஸ்ரீமான் மகாதேவா அவர்கள் இப்பரிசைப் பள்ளிக்கூடங்களுக்கு அளிக்க முன்வந்திருக்கலாம்.

இக்காலத்தில் சுகாதாரப்பகுதியினரும் கல்விப்பகுதியினரும் ஒன்றுபட்டு உழைப்பது மிகவும் போற்றத்தக்கதாகும். அன்றியும் இப்போட்டிக்குவந்த நான்கு பாடசாலைகளும் மிகவும்திறமையாக வேலை செய்திருந்தன. அவைகளுள் முதலாவதாக வந்தகமலாசனி வித்தியாசாலைசுகாதாரத்தைப் போதனையளவில் அல்லாமல் சாதனையிலும் (Practical work) காட்டியிருப்பது மிகவும் விசேடமாகும். இந்தப் பள்ளிக்கூடங்களில் சுகாதாரவேலையை இவ்வளவில் நடாத்தி வைத்த டக்டர் சபாரத்தினம் அவர்களின் முயற்சி போற்றத்தக்கது. ஆனால் இவ்வேலையை இனிமேலும் தொடர்ந்து நடாத்த வேண்டும். இவ்வளவில் நான் நன்றிகூறி முடிக்கிறேன், எனமுடித்தார்கள். அப்பால் டக்டர் செல்லப்பா O B E அவர்களும் ஆங்கிலத்தில் பேசினர். அவர்கள் பேசியதின் சாராம்சம்:

யாழ்ப்பாணத்தவர் புது வழக்கங்களைக் கைக்கொள்வதில் மிகவும் பிற்போக்கானவர்களாயிருந்தாலும் அவை நன்மையைப் பயப்பன எனக்காணும்போது அவைகளைக் கைக்கொள்ளத் தவறமாட்டார்கள். வடபாகத்தில் இப்படிப்பட்ட திறமான சுகாதார வேலையை இந்த நான்கு பள்ளிக்கூடங்களும் செய்ததைக்கண்டு நான் மிகவும் ஆச்சரியப் பட்டேன். இவ்வேலைகளை நடப்பித்த டக்டர் சபாரத்தினத்தினதும் சுகாதாரப் பரிசோதகர்களினதும் முயற்சி போற்றத்தக்கது. இந்நான்கு பாடசாலை ஆசிரியர்களையும்பின்பற்றி மற்றைப் பாடசாலை ஆசிரியர்களும் இவ்வேலையைத் தொடர்ந்து செய்து வரவேண்டும். இம்முயற்சி பெரிதும் பயன்படவேண்டுமென்று ஆசீர்வதிக்கிறேன், எனப் பேசி முடித்தார். முடிவில் ஸ்ரீ மகாதேவா அவர்களால் அளிக்கப்பட்ட கேடயமும் டக்டர் துரைராசா அவர்களால் அளிக்கப்பட்ட வெள்ளிக்கிண்ணமும் கமலாசனி வித்தியாசாலைக்கு முதலாம் பரிசாக வழங்கப்பட்டன. இரண்டாம் பரிசில் அல்லாரை அரசினர் பாடசாலைக்கு வடபெரும்பாக வித்தியாதரிசியால் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. மற்றைய பாடசாலைகளுக்குச் சுகாதாரப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. பின் தலைவர் அவர்கள் எழுந்து போட்டிகளும் பரீட்சைகளும் சில சமயங்களில் கெடுதியை விளைவிப்பன வென்றும் அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தினால் மிகவும் பயன்விளைப்பன வென்றும், இந்நான்கு பாடசாலை ஆசிரியர்களையும் மற்றவர்களுஞ் சேர்ந்து இம்முயற்சியைப் பயன்படச் செய்யவேண்டுமென்றும் பேசி முடித்தார்கள். சந்தில் கமலாசனி வித்தியாசாலைத் தலைமையாசிரியரின் நன்றியறிதலுடன் கூட்டம் இனிது நிறைவேறியது. —அடித

இந்துசாதனப் பொன்விழா
மலர்கள்

இவ் வெளியீடுகள் சில பிரதிகள் மாத்திரம் ஆங்கிலத்திலும் தமிழிலும் விலைக்கிருக்கின்றன. தமிழ் மலரில் சிறந்த அறிஞரால் எழுதப்பெற்ற செய்யுள் நடையிலும் வசன நடையிலுமாக 31 விஷயங்கள் உள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பாரிய மரணசாதனவழக்கு முதலிய பழைய வரலாறுகளும், "ஓம் நான் சொல்லுகிறேன்" என்பது முதலிய சில கதைகளும், இக்குப் பெண்களின் இலட்சியம் முதலிய அரிய வியாசங்களும் உள்ளன. ஆங்கில மலரிலும் சிறந்த ஆசிரியர்கள் வரைந்துதவிய அரிய வியாசங்கள் உள்ளன.

வர்ணப் படமும் சித்திரங்களும் பிரதிமைப்படங்களும் இயற்கைக் காட்சிகளும் இரு வெளியீடுகளிலும் விரவியுள்ளன. பிரதிகள் உயர்ந்த இரேனல் கடிதத்தில் நவமான அச்சரங்களிலும் தெளிவாக அச்சிட்டு, நீடித்த காலம் நின்றுதவக்கூடிய பொன்னிறமான தடித்த கடிதத்தில் முகப்புறுற அச்சிடப்பெற்று வனப்புவாய்ப்பக் கட்டப்பட்டுள்ளன.

தனித்தனி பிரதி விலை ரூபா 1, முத்திரைச் செலவு சதம் 15. ஆங்கிலப்பிரதியும், தமிழ்ப்பிரதியும் ஒருங்குவாங்குவோர் 2 ரூபா மாத்திரம் அனுப்பினுல் முத்திரைச்செலவு எங்கள் பொறுப்பாக பிரதிகள் அனுப்பப்படும்.

மனேஜர்,
இந்துசாதனுலயம்,
(வண்ணார்பண்ணை Ceylon).

குருலிங்க சங்கமம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீடம் ஆவுடையாள் எனவும் பெயர் பெறும். அவ்வாவுடையாளின் ஒரு பக்கத்தில் நீண்டிருக்கும் கோமுகியானது ஆன்மாக்களைத் திருநோக்கஞ் செய்யல் குறிப்பாகும். இவ்விலிங்கமானது பரார்த்தம் ஆன்மார்த்தம் என இரு வகைத்து. உலகில் கண்ணுள்ள ஆன்மாக்களுக்கு அநுக்கிரகஞ் செய்தற் பொருட்டுத் தேவர்களாலும் இருடிகளாலும் மனுடர்களாலும் இவ்வுலகில் விதிப்படி விசேடமாகத் தாபிக்கப்பட்ட லிங்கம் பரார்த்தலிங்கம் எனப்படும். அதுவே திருக்கோயிலுள்ளிருக்குஞ் சிவலிங்கம். மனுடராயினோர் தந்தமான்ம லாபத்தின் பொருட்டு வீடுகளிற் பூசிக்கும் லிங்கம் ஆன்மார்த்த லிங்கம் எனப்படும்.

பரார்த்த லிங்கம், சுயம்புலிங்கம், தேவிலிங்கம், திவ்விய லிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம், இராக்ஷசலிங்கம், ஆசுரலிங்கம் என எழு திறத்த. தானே தோன்றியது சுயம்புலிங்கம்; இது பர்வதாகாரமாயுள்ளது. தேவியாற் பூசிக்கப்பட்டது தேவிலிங்கம். தேவர்களாற் குபிக்கப்பட்டது தைவிகலிங்கம். முனிவர்களாற் குபிக்கப்பட்டது ஆரிடலிங்கம். மானுடராற் குபிக்கப்பட்டது மானுடலிங்கம். அசுரர்களாலும் இராக்ஷசர்களாலும் பூசிக்கப்பட்டவை முறையே ஆசுரலிங்கமும் இராக்ஷசலிங்கமும் எனப்படும். சிதம்பரத்தின்கண்ணுள்ள திருமூலத்தானம் போன்றன சுயம்புலிங்கம். காஞ்சிபுரத்திற் காமாக்ஷி அம்மையாராற் பூசிக்கப்பட்டது தேவிலிங்கம். சீகாழியிற் பிரமதேவராற் பூசிக்கப்பட்டதும், திருமாணிக் குழியில் விண்டுவாற் பூசிக்கப்பட்டதும், திருக்கண்ணூர்க்கோயிலில் இந்திரனாற் பூசிக்கப்பட்டதும் தைவிகலிங்கமாகும். திருக்குற்றாலத்தில் அகத்தியராற் பூசிக்கப்பட்டது ஆரிடலிங்கம். இராமேசரம் முதலிய பன்னிரண்டு தலங்களிற் குபிக்கப்பட்டவை சோதிலிங்கம். இடும்பாவனத்தில் இடும்பனாற் பூசிக்கப்பட்டது இராக்ஷசலிங்கம். திருவோணகாந்தன்தளியில் ஓணன், காந்தன் என்னும் இரு அசுரர்களாற் பூசிக்கப்பட்டது ஆசுரலிங்கம். இவ்வெழுவகையே யன்றிக் கணபதி சுப்பிரமணியர் ஆகிய இருவராற் பூசிக்கப்பட்ட காணலிங்கம் என ஒன்றுஞ் சொல்லப்படுகிறது. திருச்செங்காட்டங்குடியில் விநாயகராற் பூசிக்கப்பட்டதும், திருச்சேய்ஞலூரில் குமாரக் கடவுளாற் பூசிக்கப்பட்டதும் காணலிங்கமாகும்.

இன்னும் பஞ்சபூத மகாலிங்கங்கள் எனச் சிறப்புவகையாற் கூறப்படும் ஐந்து லிங்கங்கள் உள. அவை காஞ்சிபுரத்திற் பிருதிவி மயமான ஏகாம்பர லிங்கமும், திருவானைக்காவில் அப்புமயமான ஜம்புகேசுர லிங்கமும், திருவண்ணாமலையில் அக்கினி மயமான அருணாசல லிங்கமும், திருக்காளத்தியில் வாயுமயமான திருக்காளத்திலிங்கமும், சிதம்பரத்தில் ஆகாயமயமான திருமூலலிங்கமுமாம். இவ்வைந்தினையுங் கண்ணினாற் றரிசித்தாலும், காதினாற் கேட்டாலும், வாயினாற் சொன்னாலும், மனத்தாற் றியானித்தாலும் இட்ட சித்தி சித்திக்கும்.

இவையன்றி ஆதார க்ஷேத்திரங்களுமுள. அவையாவன மூலாதார க்ஷேத்திரம் திருவாரூர். சுவாதிட்டான க்ஷேத்திரம் திருவானைக்கா. மணிபூரக க்ஷேத்திரம் அருணாசலம். அநாகத க்ஷேத்திரம் சிதம்பரம். விசுத்தி க்ஷேத்திரம் திருக்காளத்தி. ஆஞ்ஞை க்ஷேத்திரம் காசி. பிரமரந்திர க்ஷேத்திரம் கைலாயம். துவாதசாந்த க்ஷேத்திரம் மதுரை. இக்ஷேத்திரங்களில் எழுந்தருளியிருக்கும் பெருமான் திருநாமங்கள் முறையே தியாகேசர், ஜம்புநாதர், அருணாசலேசர், சபாபதி, காளத்தீசர், விசுவநாதர், ஸ்ரீகண்ட பரமேசுவரர், சுந்தரேசுவரர் என்பன. இவை இன்னனத் திருவிளையாடற் புராணத்துக் கூறப்பட்டுள்ளன.

இன்னும் திருக்கோயிலின்கண்ணுள்ள மூர்த்தி தூல லிங்கம். விமானத்தின் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் சூக்குமலிங்கம். அதற்குமுன்னுள்ள பலிபீடம் பத்திரலிங்கம். இதனை,

"தூய விமானமுந் தூலம தாகுமா
லாய சதாசிவ மாகுநற் சூக்குமம்
பாய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய வரனிலை யாய்ந்துகொள்
வார்க்கே."

என்னுந் திருமூலர் திருவாக்கானறிக.

இனி, ஆன்மார்த்த பூசைக்குரிய லிங்கங்கள் வாணலிங்கம், படிகலிங்கம், க்ஷணிகலிங்கம் முதலாகப் பலதிறத்தன. வாணாசுரன் என்பான் உழுந்து முதல் முழம் ஈறாய பரிமாணமுள்ள இலிங்கங்களைப் பூசித்தான். அதனால் அவை வாணலிங்கம் எனப்பட்டன. இவ்வாண லிங்கங்களிற் சிவபிரான் எப்பொழுதுஞ் சாந்நித்தியமாய் எழுந்தருளியிருத்தலால் ஆவாகனம் வேண்டற்பாற்றன்று. வாணலிங்கம் முதலியன இட்டலிங்கமாகப் பூசிக்கப்பட்டவழி சலலிங்கமெனப் பெயர் பெறும். சலம் அசைவு. ஆலயங்களிலே பரார்த்தலிங்கமாகத் தாபித்துப் பூசிக்கப்படின் அசலலிங்கம் எனப்படும். அசலம் அசைவற்றது. க்ஷணிக லிங்கமாவது பூசித்தவுடன் விடப்படுவது. அக்ஷணிக லிங்கம் ஆற்றுமண், புற்றுமண், சந்தனம் முதலாய பன்னிரு திறத்தான் ஆக்கப்படுவது. ஆசாரியர் விசேடம் அல்லது நிர்வாண தீக்ஷை செய்து சீடனை நோக்கி "நீ உன் உடலுள்ளளவுங் கைவிடாது இவரை நாடோறும் பூசிப்பாயாக" என அநுமதி செய்து "அடியேன் சரீரம் உள்ளவரையும் சிவபூசை செய்தன்றி ஒன்றும் உட்கொள்ளேன்" எனப் பிரதிக்ஞை செய்வித்துக் கொண்டு கொடுக்க, அச்சீடன் பெற்றுப் பூசிக்கும் லிங்கம் இட்டலிங்கம் எனப்படும். ஆன்மார்த்த பூசை செய்யாது பரார்த்த பூசை செய்தவர்கள் பூசையின் பயனை இழப்பார்கள். பிரம விட்டுணுக்களும் ஆன்மார்த்த பூசை செய்தே தத்தம் அதிகார கிருத்தியங்களைச் செய்வர். அரிபிரமேந்திராதி தேவர்களது பதவிகள் சிவார்ச்சனையின் பயனால் அவர் பெற்றுக் கொண்டனவே.

"குடங்கை நீரும் பச்சிலையு
மிடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையுந்
தருவாய் மதுரைப் பரமேட்டி"

என்றார் பெரியாரும்.

சராசரப் பிரபஞ்சங்கள் அனைத்தினும் ஆன்மாக்களை இரக்ஷித்தல் வேண்டிச் சிவபெருமான் லிங்க ரூபமாய் விளங்குகின்றார். அன்போடு வழிபடுகிறவர்களுக்கு அவ்வவ்விடங்களிலே வெளிப்பட்டு நின்று அவரவர் வேண்டிய இட்டசித்திகளை அருளுகின்றார். சிவலிங்க வழிபாட்டாலல்லவா அரிபிரமேந்திராதி தேவர்கள் தத்தம் பதவிகளையும் அதிகாரத்தையும் பெற்றார். முனிவர்கள் தவத்தலைமையையும் ஞானத்தையும் பெற்றார். மனுடர்கள் இம்மை மறுமை இரண்டன் பயன்களையும் பெற்றார். அகங்காரத்தை ஒழிப்பதும் அதிபாதகத்தை அழிப்பதும் தீர்க்காயுளைக் கொடுப்பதும் அருளைப் பயப்பதும் சிவார்ச்சனையாமெனத் தெளிக. இதனைப் பிரமா, திருமால் தக்கன் அகத்தியர் மார்க்கண்டேயர் முதலாயினோர் செய்த சிவார்ச்சனையானறிக. இக்கருத்துப் பற்றியே எம் திருஞானசம்பந்தப் பெருமானும்,

"பூத்தேர்ந் தாயின
கொண்டுநின் பொன்னடி
ஏத்தாதா ரில்லை
யெண்ணுங் காலே"

எனத் திருவாய் மலர்ந்தருளினர். இன்னும்,

"வண்டுலாந் தண்டுழாய்
மாயோ னிறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும்
புத்தே ளிறுமாப்பும்
அண்டர்தொழ வாழு
மிறுமாப்பு மாலால
கண்டனைப் பூசித்த
பேறென் றுணர்கிலையால்"

என்னுந் திருவாக்கானுமுணர்க. இன்னுஞ் சிவார்ச்சனையுஞ் சிவதரிசனமுந் தலவாசமுந் தீர்த்த ஸ்நானமும் முறையாலியற்றினோர்க்கு ஞானாசாரியர் தரிசனமும் ஞானோபதேசமுஞ் சித்திக்கும். அது,

"மூர்த்தி தலந் தீர்த்தம்
முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே."

என்னுந் தாயுமானவர் திருவாக்கால் அறியப்படும். மேற்கூறிய செயலால அதிதீவிரபக்குவத்தை அடைவர். அவ்வமயத்து எழுந்தருளி வந்து ஆட்கொண்டருளும் ஞானாசாரியனது ஒரு வார்த்தையே சிவமாந்தன்மையைப் பயக்கும் என்றபடி. இன்னோரன்ன ஏதுக்களால் சார்ந்ததன் வண்ணமாயுள்ள ஆன்மாக்களுக்கு லிங்க வழிபாடு இன்றியமையாததாம். இக்காரணம் பற்றியே எம்மன்னையாகிய பார்ப்பதியம்மையாரும், விநாயகக் கடவுளும், குமாரக்கடவுளும் எம்மனோர்க்கு இவ்வழியைக் காட்டுவான் சிவார்ச்சனை செய்தருளினர்கள். திருஞான சம்பந்த சுவாமிகளும் திருநாவுக்கரசு சுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் மாணிக்கவாசக சுவாமிகளும் பேரார்வத்தோடு சிவலிங்க வழிபாடு செய்தருளியவர்களே. இக்காரணங்களாற் சிவலிங்க வழிபாட்டை ஒருபோதும் கைவிடாது கடைப்பிடிக்க.

தொடரும்

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள் சீமேந்து வகைகள் விற்பனவு செய்வோர்

பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரோப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்

Y 50. 3-4-39 3-3-40

வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்

குறைகள் பற்றிக் கல்வி மந்திரி

பரிசளிப்புக் கூட்டத்தில் சமாதானம்

மொறட்டுவை, பெப், 18.

மொறட்டுவை வித்தியாலயப் பரிசளிப்பு வைபவத்திற்குத் தலைமை வகித்த கல்வி மந்திரி திரு. ஸி. டப்ளியூ. டப்ளியூ. கன்னங்கரா பேசியதாவது:-

சென்ற 3 அல்லது 4 வாரங்களாகப் பொதுக் கூட்டங்களில் என்மீதும் பல கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கிளர்ச்சிக்காரர்கள் எழுப்புங் கூச்சல்களுக்கு நான் இப்பொழுது மறுப்புக்கூறவில்லை.

ஒரு கூட்டத்தில் "கல்வி மந்திரி பௌத்த மதத்தைச் சார்ந்தவராக இருப்பதால், அவர் கிறிஸ்தவப் பாடசாலைகள் அனைத்துக்கும் விரோதமாக இருக்கிறார்." என்று கூறப்பட்டது.

மற்றொரு கூட்டத்தில் என்னை ஒரு "புதிர்" என்று அழைத்திருக்கிறார்கள். நான் இதற்கு மறுப்புக் கூறப்போகிறதில்லை. நான் ஒரு "புதிர்" ஆனபடியால் எப்பொழுதும் அவர்களுக்குப் "புதிர்" ஆகவே இருக்க விரும்புகிறேன்"

இறுதியில் மந்திரியார் ஒரு கழுதைக் கதையைக் கூறிவிட்டுப் பொதுமக்கள் தங்கள் செவிகளில் விழும் எல்லாக் கதைகளையும் உண்மையென்று நம்பக்கூடா தென்று சொன்னார்.

அதன்பின் மந்திரியார் தம் பள்ளிப் பருவத்தில் தாம் சட்டாம்பிள்ளையாக இருந்ததாகவும் சிங்களத்திற் பேசும் மாணவர்களைப் பிரம்பால் அடிப்பதற்குக் கூடத் தனக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134,36700
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியா நோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Y47. 21 11-38—20-11-39

திங்.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் மானிப்பாய் க. சோமசுந்தரம் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

இல.	திக.	ரூபா	பெயர்	ஊர்	நகைவிபரம்.
1938ம் ஆடு 5ம் மாதம்					
4482	22	15	க. சின்னவன்	ஆனைக்கோட்டை	ஒரு சோடி குவளைக்கடுக்கன்
6ம் மாதம்					
4526	2	20	த. சின்னையா	மானிப்பாய் தெற்கு	மூக்கு வைத்த குடும்பி மாட்டி
4535	5	12	வா. நடராசா	மானிப்பாய் வடக்கு	இரண்டு மயிர்மாட்டி
4583	21	7	சி. இராமசாமி	நவாலி தெற்கு	ஒரு அரைப்பவுன் குண்டு வைத்தது
4618	29	6	சி. பாறுபதி	நவாலி வடக்கு	ஒரு தமிழ்த் தாலி
7ம் மாதம்					
4671	18	48	பொ. நாகலிங்கம்	மானிப்பாய்மத்தி	ஒருசோடி முறுக்குக்காப்பு
9ம் மாதம்					
4831	13	8	சு. நவரட்டினம்	மானிப்பாய் தெற்கு	ஒரு நீலக்கல் மோதிரம்
10ம் மாதம்					
4891	7	12	த. சித்தர்	நவாலி வடக்கு	ஒரு தனிப் பிள்ளைக்காப்பு
4897	8	6	சி. இராமசாமி	நவாலி தெற்கு	ஒரு அரைப்பவுன் குண்டுள்ளது
4906	11	13	சி. அம்பலவாணர்	சங்கரத்தை	ஒரு பெட்டி மோதிரம்
4912	13	50	வ. சின்னத்தம்பி	மானிப்பாய் மத்தி	ஒரு அல்லெவற் சங்கிலி
4923	19	8	மு. வயித்திலிங்கம்	ஆனைக்கோட்டை	ஒரு சோடி சிகப்புத் தோடு
11ம் மாதம்					
4978	12	12	பெ. வயிரமுத்து	ஆனைக்கோட்டை	ஒரு சோடி குவளைக் கடுக்கன்
5024	29	18	அ. நல்லதம்பி	ஆனைக்கோட்டை	ஒரு சோடி குவளைக்கடுக்கன்
12ம் மாதம்					
5056	12	10	சு. வேலுப்பிள்ளை	ஆனைக்கோட்டை	ஒரு கொம்புத்தாலி இரண்டு தடை
1939ம் ஆண்டு 1ம் மாதம்					
5114	1	7	தி. தம்பிப்பிள்ளை	நவாலி வடக்கு	ஒருசோடி வாளி
5117	1	38	மு. சின்னக்குட்டி	நவாலி வடக்கு	ஒரு தனிக்காப்பு, ஒரு சிகப்புப் பதக்கம்
2ம் மாதம்					
5215	2	6	மு. முத்துப்பிள்ளை	நவாலி தெற்கு	ஒரு பெட்டி மோதிரம்
5228	7	12	சு. சுப்பிரவேலு	நவாலி வடக்கு	ஒரு சோடி குவளைக் கடுக்கன்
5234	9	10	க. அப்புக்குட்டி	நவாலி தெற்கு	ஒரு தாலி, ஒரு தலை
5251	15	6	ம. பொன்னுசாமி	நவாலி வடக்கு	ஒரு வெள்ளைக்கல் மோதிரம்
5266	20	10	ஈ. சின்னப்பா	மானிப்பாய் மத்தி	ஒரு அச்சுத்தலை மோதிரம்

விற்பனவு நிகழும் பிரமாதி வருஷம் மாசி மாதம் 28ந் தேதி (11-3-40) திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் ... மேற்படியார் கடையில் விற்கப்படும்.

Mis 279. 22 & 26-2-40

பொ. இராசரத்தினம்,
வெண்டிக் மேஸ்தர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பொன்விழா.

ஒருலக்ஷம் ரூபாநிதிக் கணக்குப்போட்டி

முதலாம் பரிசு புது ஒஸ்டின் சலூன் கார்

(விதிகளும் செய்யும் வகையும்)

கூப்பன்களிலுள்ள சதுரங்கக் கோடுகளில், மேல்கீழாகவும், வலம் இடமாகவும் ஒரு மூலையிலிருந்து எதிர்மூலையாகவும் கூட்டும்போது (பொன்விழா இலக்கமாகிய) 50 என்னும் இலக்கம் பெறக்கூடியதாக 5 முதல் 20 வரையுள்ள இலக்கங்களை ஒழுங்குபடுத்தி நிரப்புக.

ஓர் இலக்கத்தை ஒருமுறைதான் போடலாம். நிரப்பும்போது மையால் தெளிவாக எழுதுக. அழித்து எழுதப்பட்ட இலக்கங்களையும் ஒருமுறையெழுதிப் பின்னர் மாற்றியெழுதப்பட்ட இலக்கங்களையுமுடைய கூப்பன்கள் தகுதியற்றவை என்று தள்ளப்படும்.

போட்டியிற் கலந்து கொள்வோர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பியனுப்பலாம். பொன்விழாக் கொண்டாட்டக் காரியநிருவாகசபை அங்கத்தவர்கள் இப்போட்டியிற் பங்குபற்ற உரித்துடையவரல்லர். புனைபெயர்கள் அங்கீகரிக்கப்படமாட்டா.

எல்லாக் கூப்பன்களும் 1940ம் ஆண்டு நவம்பர்மீ 30-ந் திகதியன்று அல்லது அதற்குமுன்னர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியருக்குத் திருப்பியனுப்பப் படுதல் வேண்டும். அவை, இடது பக்க மேல் மூலையில் "கூப்பன் போட்டி" என்று குறிக்கப்பட்ட என்வலப்புகளுள் வைத்து அனுப்பப்படவேண்டும்.

இப்போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.

பரிசுத் தேர்வு.

இந்தக் கணக்குக்குச் சரியான விடைகள் பல உண்டு. ஆதலால், கூப்பன்கள் அனுப்பினோரின் விடைகள் எடுக்குமுன் சரியான எல்லா விதமான விடைகளையும் எழுதி ஒட்டி, வேறோர் இடத்தில் போட்டுக் கலந்து, அவைகளில் ஒன்றை மத்தியஸ்தர் முன்னிலையில் தெரிந்தெடுக்கப்படும். அப்படி முதலில் எடுக்கப்பட்ட விடைக்கு எல்லாவிதத்தாலும் ஒத்திருப்பதே சரியான பரிசுக்குரிய விடையாகக் கொள்ளப்படும்.

அதன்மேல், முறையே அப்படிச்சரியான 25 விடைகள் இருவரைச் சீட்டெடுப்பு போல் எடுக்கப்படும், இவற்றில் முதலாவது பெறுபவர் சரியானவிடையை அனுப்பினோர் முதலாவது பரிசாகிய ஒஸ்டின் கார் ஒன்றைப் பெறுதற்குரியர். மற்ற 24 சரியான விடைகளையும் அனுப்பினோர் தனித்தனி 50 ரூபாப் பரிசைப் பெறுதற்குரியர். முன்னரே தெரிந்தெடுக்கப்பட்ட விடைக்குச் சரியானவிடை, அனுப்பப் பெற்ற கூப்பன்களில் ஒன்றிலேனும் இடைக்காவிட்டால், அதனை விடுத்து, கூப்பன்களில் முதலாவதாக எடுக்கப்படும் எந்தச் சரியான விடையையும் அனுப்பினோரே முதற்பரிசுக்குரியர். அவ்வாறே அதன் பின், முறையே எடுக்கப்படும் 24 சரியான விடைகளையும் அனுப்பினோர் மற்ற 24 பரிசுகளையும் பெறுதற்குரியர்.

கூப்பன்கள் இந்துக்கல்லூரியில் விற்கப்படும். (விலை ரூ. 1.)

குயின் பிறண்ட் (அரசி அடையாள) ஓடுகள்

குறைந்த விலை நிறைந்த குணம்

எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறுத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.

இ. சுந்தரமூர்த்தி, (*Sole Agent*)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
c/o S. Veeragathipillai & Sons.

(Y. 49 12-8-39—11-8-39)

சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரு, சாலாமுஸலி, சப்பேமுத்ஸலி, பிஸ்தான், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவரி, நீர்முள்ளிவிதை, நாகப்பு, லங்கபள்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் சிரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருடைத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீரும். மேற்சொன்ன இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் மேற்சொல்லியவியாதிகள் குணமடைவதுடன் ருதுசுவாயு பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா **20.** அரைருத்தலுக்கு ரூபா **10** கால்ருத்தலுக்கு ரூபா**5** தபாற்செலவுபிரத்தியேகம்

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாய் இராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகப்பிள்ளை
ஸ்ரீ. சிவஞான ஆரோக்கிய வைத்தியசாலை,
கீட்டிலக்கம் 13 பழையயாடிறோட்டு, கோட்டைமுனை, மட்டக்களப்பு, சிலோன்.

(Y 14-6-39 to 31-12-39)

சைவவித்தியா விருத்திச் சங்கத்துக்கு உதவிபுரியுங்கள்!

இலங்கையில் மகப்பெரிய சைவக்கல்வி ஸ்தாபனம் இதுவே.

16 வருஷங்களிலேயே, இதன்கீழ் 16,000 மாணவர்கள் கற்கும் 480 ஆசிரியர்கள் கற்பிக்கும் 97 ஸ்தாபனங்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சைவப்பெண்கள் அநாதசாலை, யாழ்ப்பாணம் சைவ ஆண்கள் அநாதசாலை, யாழ்ப்பாணம் காவிய பாடசாலை, (தமிழ், சமஸ்கிருதம், சிங்களம்) யாழ்ப்பாணம் சிங்கள இராப்பாடசாலை, யாழ்ப்பாணம் சைவாசிரியகலாசாலை, 2 ஆங்கிலவித்தியாசாலைகள், 5 துவிபாஷா பாடசாலைகள், 85 தமிழ்ப்பாடசாலைகள் ஆகிய இவற்றை இந்த ஸ்தாபனம் நடத்திவருகின்றது.

ரூபா. 100 கொடுக்கும் ஒவ்வொரு சைவாபிமானியும் சீவியகால அங்கத்தவராகின்றனர்.

ரூபா 10 கொடுக்கும் ஒவ்வொரு சைவாபிமானியும் ஒரு வருஷத்துக்கு அங்கத்தவராகின்றார்.

(Mis. 279. 12-2—11-4-40)

N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo.

Telephone No. 30.

(Y 65 1-4-38—31-3-39) இ

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Monday 26th February 1940.